


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் 04 – ஜனவரி 05

மலர்-36 இதழ்-07



ஆசிரியர்

*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்

*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்

*மெற்றில்டா இராஜேந்திரம்*
*செல்லத்துரை ஜெயராஜா*
*பெஸ்லீயோ வாஸ்*



வெளியீடு

*சமூகத் தொடர்பு நிலையம்.*
*திரு/ மட். மறை மாவட்டம்*

முகவரி

*சமூகத் தொடர்பு நிலையம்*
*அ.பெ.எண் – 44*
*மட்டக்களப்பு.*

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு | - | 01 |
| சமாதான முயற்சிகளுக்கு... | - | 02 |
| ஆயிரம் போதனைகள்... | - | 04 |
| பூமிக்கு வருவதெப்போ | - | 06 |
| குருத்துவப் பொன்... | - | 07 |
| குடிசை ஒன்று கோயிலாகிறது | - | 09 |
| நமக்குள் பிறக்கும் கிறிஸ்து | - | 10 |
| இறைமகனே துணைபுரிவார் | - | 11 |
| திருமுழுக்கு யோவான் | - | 12 |
| கிறிஸ்துவின் பிறப்பை... | - | 13 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 15 |
| மாணவர் பக்கம் | - | 17 |
| சூறையாடிய 'சுனாமி' | - | 18 |
| இலக்கிய மஞ்சரி | - | 20 |
| அடுத்த வாரிசு | - | 22 |
| நத்தார் என்றால் | - | 24 |
| உங்களோடு | - | 25 |
| அன்னை மரியாள் ஓர்... | - | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

எப்போதோ, எப்படியோ வந்திருக்க வேண்டிய தொண்டன்- டிசம்பர், ஜனவரி இதழாக டிசம்பர் மாத இறுதியில் வரவிருந்த தொண்டன் இயற்கை அனர்த்தங்களால் இடறல் பட்டு இப்போதுதான் வருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் சறுக்கல் ஏற்பட்ட பின் எங்கே யுத்தம் மூண்டுவிடுமோ என்று சஞ்சலத்தோடு வாழ்ந்த மக்களை மழைவெள்ளம் வந்து பாடாய்ப்படுத்தி விலக, 'விட்டேனா பார்' என்று கடலலைகள் 'சுனாமி' என்ற பெயரில் சீறி எழுந்து சின்னாபின்னப்படுத்திச் சிதைத்து விட்டன.

ஆயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்ட இந்த வரலாறுகாணாத பேரழிவு ஏற்படுத்தியுள்ள தாக்கம் சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக, அரசியல் ரீதியாக நீண்டகாலத்துக்கு நிலைக்கப்போகிறது. சுனாமியால் ஏற்பட்ட பதற்றமும் அச்சமும் விலகிவர புதிய அச்சங்கள் உருவாகத் தொடங்கியுள்ளன. 'தமிழ் மக்கள் இரண்டாவது சுனாமியை எதிர்கொள்ள வேண்டும்' என்ற தலைவரின் எச்சரிக்கை பொருளுள்ளது.

கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு, பொங்கல் விழாக்கள் அனைத்தும் இம்முறை பொலிவிழந்து போயின; ஆனாலும் பொருளிழந்து போகவில்லை.

கிறிஸ்து ஓர் அகதி வாழ்க்கைச் சூழலில்தான் பிறந்தார். எளிய மக்களோடு தம்மைப் பகிர்ந்து கொண்டார். பகிர்தல் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை. இயற்கைப் பேரழிவினால் மக்கள் அந்தரித்து நின்றபோது உலகமே திரண்டு ஓடிவந்து உதவியது. நமது நாட்டிலும் பேதங்களை எல்லாம் மறந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைவரும் உதவினர். இது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை: அர்த்தமுள்ள இயேசுவின் பிறப்பு; பொருள் மிகுந்த வாழ்வுப் பொங்கல். இந்த மனநிலையையும், சூழ்நிலையையும் நாம் கட்டி வளர்க்கவேண்டும். குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்களின் அவலங்களை எவரும் பயன்படுத்த முனையக் கூடாது. அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின் அது சுனாமியால் ஏற்பட்ட அழிவை விட பேரழிவையே இந்நாட்டுக்கு ஏற்படுத்தும் என்பதை அனைவரும் உணர வேண்டும். இராஜதந்திரங்களை மூட்டைகட்டி வைத்துவிட்டு மனிதாபிமானத்தைப் போற்ற வேண்டிய நேரமிது. இயற்கை அனர்த்தம் ஒருபக்கம் அழிவைத் தந்திருந்தாலும் நாம் மனிதாபிமானத்தைப் பட்டை தீட்ட, நம்மைப் பகிர்ந்து கொள்ள, புதுவாழ்வு காண, சமாதானப் பொங்கல் படைக்க கடவுள் தந்த ஒரு வாய்ப்பாக இதனைக் கருதலாமே!

அலைகளால் அள்ளுண்டு அவலமாய் இறந்துபோன அனைவருக்கும் தொண்டன் துயரம் தோய்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறது. அதேவேளை அழிவிலும் ஒரு புதிய வாழ்வு துளிர்க்க வேண்டுமென இறை அருளை இறைஞ்சுகிறது.

\- இணை ஆசிரியர் -

*மக்களினங்களுள் தப்பிப் பிழைத்தோரே!*
*ஒன்றுதிரண்டு வாருங்கள்; ஒருங்ககே கூடுங்கள்;*
*ஒன்றாய்ச் சிந்தித்து முடிவெடுங்கள்*

*எசாயா 45/20, 21*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ சமாதான முயற்சிகளுக்கு மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் ”



**– ஆயரின் நத்தார் செய்தி –**

கிறிஸ்து பிறந்த இந்த இனிய நாளிலே எல்லா மக்களுக்கும் சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி அனைத்தும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அனைவருக்கும் விடுதலை, சமாதானம்; அதற்குத் தேவை நல்ல மனம். ‘உலகில் நல் மனத்தோர்க்குச் சமாதானம்” இந்த நல்ல மனங்களை உருவாக்குவதே இயேசு பிறப்பின் இலக்காகும். அவரது போதனை, வாழ்வு எல்லாம் இதனையே மையம் கொண்டிருந்தது.

ஏழைகள், அநாதைகள், விதவைகள், கைவிடப்பட்டவர்கள, ஒதுக்கப்பட்டவர்கள் மேல் அவர் விசேட அக்கறை காட்டினார்.

ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர்
துயருறுவோர் பேறு பெற்றோர்
அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்
தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்.
நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்.

இவ்வாறு அவரது மலைப் பொழிவுப் போதனைகள் அவர் தம் பிறப்பின் நோக்கத்தைப் புலப்படுத்தும் உரை கல்லாகும்.

கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் இந்நாட்களில் இவற்றை மீட்டுப் பார்த்தல் பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.

சிறப்பாக அன்பைப் பகிர்ந்து கொள்வதும் பகைமை மறந்து சமாதானத்தை ஏற்படுத்துவதும் பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.

சிறப்பாக அன்பைப் பகிர்ந்து கொள்வதும் பகைமை மறந்து சமாதானத்தை ஏற்படுத்துவதும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமை காண்பதும் கிறிஸ்தவர்களது கடமையாகும்.

துரதிஷ்டவசமாக நமது நாட்டில் சமாதான முன்னெடுப்புக்கள் முடங்கிப் போயுள்ளன. பொருளாதார நிலை, இன - மத ஒற்றுமை, சமூக விழுமியங்கள், இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல், ஒழுக்க நெறிகள் அனைத்திலும் பாதகமான ஒரு சூழ்நிலையே நிலவுவதைப் பார்க்கின்றோம். இவ்வேளையில் நாட்டுத் தலைவர்கள், மக்கள் தலைவர்கள் மிகுந்த பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டியுள்ளது. அதிகாரப் போட்டிகள், கட்சிப் போட்டிகள் இவற்றுக்கு அப்பால் நின்று நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு, இவர்கள் செயற்பட முன்வர வேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறிப்பாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை முழுநாட்டுக்குமே ஆபத்தானது. இது அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பெருந்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அனைவரும் முன்வரவேண்டும்.


சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தமட்டில் நாட்டில் நிலவும் நிலவும் இரண்டும் கெட்டதான ஒரு நிலை கிழக்கு மாகாணத்துக்குப் பெரும் சவாலாக உள்ளது. அண்மைக்காலமாக இங்கு நடைபெற்றுவரும் குழுக்களுக்கிடையிலான மோதல்கள், அச்சுறுத்தல்கள், உயிர்க் கொலைகள், பழிவாங்குதல்கள் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். வெடி குண்டுகளை வீசிக் கொண்டு நாம் சமாதானத்தை எதிர் பார்க்க முடியாது. குறைகள் உள்ளதாயினும் முழுமையற்றதாயினும் சமாதான உடன்படிக்கையைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பாரும் முன்வர வேண்டும். சமாதான உடன்படிக்கையின் பின் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிம்மதியை, போக்குவரத்து வாய்ப்புக்களை, தனிப்பட்ட அளவிலான அபிவிருத்திகளை நாம் முற்றாகப் புறந்தள்ளிவிட முடியாது. இருதசாப்த காலமாக போரின் சுமைகளைச் சுமந்து புண்பட்டுப் போன மக்களுக்கு தற்போது ஓர் ஆறுதல் ஏற்பட்டுள்ளது. ஆகவே இச்சமாதானச் சூழலை நாம் வரவேற்று மேலும் வளர்த்தெடுக்க வேண்டுமேயன்றி ஆயுதங்களைக் கூராக்குவது, அது யாராக இருந்தாலும் புத்திசாலித்தனமானதன்று. வாய்ப்புக்களைத் தவறவிடுவதும் நமக்குள்ளேயே மோதி அழிவதும், அச்சுறுத்துவதும், நமது இளைஞர்களின் எதிர்காலத்துக்கு நாமே தடைக்கல்லாக நிற்பதும் வரலாற்றில் மாறாத வடுவாக நிற்கும் என்பதை உணர்ந்து கொள்வது அவசியம். ஆகவே மக்கள் அனைவரும் நிலையான சமாதான முயற்சிகளுக்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அண்மையில் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பெரு மழையும், வெள்ளப் பெருக்கும் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களது வீடுகளும், பொருட்களும் அழிந்துபோயுள்ளன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அவலத்துக்குள்ளாகி அந்தரித்து நின்ற இம்மக்களுக்கு தகுந்த நேரத்தில் உதவிகளோ பராமரிப்போ கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டவசமானதாகும். பொறுப்புள்ளவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காமல் போனது வருந்தத்தக்கது. துன்பத்திலிருப்போருக்கு உதவுவது ஒரு மனித நேயப் பணி. சிறப்பாக அது ஒரு கிறிஸ்தவப் பணி. கிறிஸ்து பிறப்புக் காலத்தில் இத்தகைய ஓர் அவலம் நேர்ந்திருப்பதைக் கவனத்திற் கொண்டு கிறிஸ்தவ மக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களில் பங்கு கொண்டு உதவி புரிவது கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டத்துக்கு மிகவும் பொருள் தருவதாகும்.

பிறக்கவிருக்கும் புத்தாண்டில் நமது மக்களின் துன்ப, துயரங்கள் அனைத்தும் நீங்கி நிரந்தர சமாதானமும் சுபீட்சம் நிறைந்த வாழ்வும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அனைவருக்கும் நத்தார் – புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயிரம் போதனைகள் திருத்தாத எம்மை அரை மணி அதிர்ச்சியாவது திருத்துமா?

சி.வி. விக்னேஸ்வரன்

"எங்களுக்கு ஏன் இப்படி நடந்தது?" என்று புரியாது மனமுடைந்து கேட்கும் ஒரு நிலைக்கு நாங்கள் யாவரும் தள்ளப்பட்டுள்ளோம். இயற்கையின் சீற்றம் இலங்கைக்கும் இன்னும் பல நாடுகளுக்கும் இதயத்தைப் பிழிய வைக்கும் விதத்தில் இன்னல்களை விளைவித்துள்ளது. இன்னார் என்று பார்க்காமல் இன, மத, வயது, பிராந்திய வேறுபாடின்றி எல்லோரையும் பாதித்துள்ளது. இது காறும் தம்முள் பகைத்துக் கொண்ட பலரையும் பட்சபாதம் காட்டாது வாட்டி எடுத்துள்ளது இயற்கை. அப்படி இருந்தும் இன்னல்களை எதிர்கொள்ளும் போது, தற்போது கூட இந்தப் பகை உணர்ச்சியும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இது மன வருத்தத்திற்குரியது.

பொறுமைக்குப் பெயர் போனவள் பூமாதேவி. அவளின் ஒரு சிறிய சிலிர்ப்புக் கூட எங்களை இவ்வளவு வாட்டி எடுத்துள்ளது. இயற்கைக்கு மாறாக, எங்கள் நடத்தைகள், சிந்தனைகள், நிலைவரங்கள் அமையும் போது எங்களை வழிப்படுத்தவே அன்னையான அவள், தனது பொறுமை நிலையில் இருந்து சற்றுத் தளர்ந்து தண்டிக்கிறாள் என்று கொள்ள வேண்டும். பிறந்த தன் மக்களைத் திருத்தவே அன்னை தன் கருணா நிலையில் இருந்து சற்றுத் தளர்ந்துள்ளாள். குழந்தைகள் நாம் இதைப் புரிந்து கொண்டு வாழப் பழக வேண்டும். இஸ்லாத்தின் சகோதரத்துவமும், கிறிஸ்தவத்தின் பிறர் நலன் கருதுங் கொடையுணர்ச்சியும், பௌத்தத்தின் ஜீவகாருண்ய மனோநிலையும், இந்து மதத்தின் தன்னலங் கருதா கடமையுணர்வும் இனியாவது எங்களுள் உறைந்து நின்று உருமாற்ற வேண்டும்.

நாங்கள் இதுகாறும் எமக்கென்றே வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டோம். பிறருக்கென வாழ்வதே மதம் என்றால், மதங்கள் கூட தனிப்பட்ட நலன்களை வலியுறுத்தியே போதிக்கப்பட்டு வந்துள்ளன. நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்போம் என்று கருதாமல் வாழ்ந்த எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி ஆயிரம் போதனைகளால் அறிவுறுத்த முடியாத வற்றை, அரைமணி நேரத்தில் அறிய வைத்துவிட்டாள் அன்னை. இனி யாவது அன்பைப் பாராட்டி வாழ் வழி அமைத்துத் தந்துள்ளாள். ஆனால், அதற்கிடையில் எத்தனை கொடூரங்கள், அவலங்கள், பறிகொடுப்புக்கள்! அன்னையின் சீற்றம் குல நடுங்க வைத்துள்ளது. மேலும் அனர்த்தங்கள் நடைபெறாது என்று உத்தரவாதம் கொடுக்கும் நிலையில் யாரும் இல்லை. வரவிருக்கும் நோய்கள் இன்னும் எத்தனை பேர்களைப் பலியெடுக்கும் என்று-ஆருடம் கூற யாரும் இல்லை. எம்மால் முடிந்ததைச் செய்வதே இந்நேரக் கட்டாயம்.

இறைவன் இருக்கின்றானா என்று பலர் கேட்கும் கட்டத்தில் இருக்கின்றார்கள் அவர்களுக்கு யாரால் பதில் சொல்ல முடியும்? சிவனையே தன் இசையால் மயக்கிய இராவணன் கூட "இன்று போய் நாளை வா" என்றதைக் கேட்டதுந்தான் தனக்கு என்ன நடந்தது, ஏன் நடந்தது என்று எண்ணத் தலைப்படுகின்றான். கேட்டதை எல்லாம் அள்ளிக் கொடுத்த இறைவன்தான் இராவணனின் இறுமாப்புக்கும் முற்றுப் புள்ளி வைக்கின்றான் இராமச்சந்திர மூர்த்தியூடாக.

இன்பத்தையும் துன்பத்தையும் தருபவன் இறைவன் தான். அதே நேரத்தில் எழுதிச் செல்லும் விதியின் கை, எழுதி எழுதி மேற்செல்வதை தடுக்க முடியாது. அழுதாலும் தொழுதாலும் ஓரணுவும் மாறுமோ தெரியாது. ஆனாலும், விதிவேறு இறைவன் வினைவேறல்ல. இன்றைய நாளை மட்டும்தான் நாங்கள் பார்க்கின்றோம். நேற்றைய எங்கள் வாழ்க்கையையும், நாளைய இனிவரும் வாழ்க்கையையும் பார்த்துத்தான் இறைவன் தன் தீர்ப்பை எழுதி வைத்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுகளையும் அல்லல்களையும் நோக்கிய பின், அகம்பாவம் தேவைதானா என்று கேட்கத் தோன்றுகிறது. நேற்றைய நடத்தைகளும் நாளைய விளைவுகளும் மனத் திரையில் ஊசலாடுகின்றன. எங்கள் நோக்குகளைச் சீர்படுத்திக் கொள்ள இப்பேர்ப்பட்ட இன்னல்கள் தேவையாக அமைகின்றன. எங்களை விட்டு வைத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். பிராயச் சித்தம் செய்வதெனில், இன்றைய காலகட்டத்தில் அல்லற்படும் அகதிகளுக்கு எம்மால் ஆன உதவிகளைச் செய்வதில்தான் எங்கள் கடமை உறைந்து கிடக்கின்றது. மதங்களும் எங்கள் பாரம்பரிய இலக்கியங்களும் இதைத்தான் எம்மிடம் எதிர்பார்க்கின்றன. அறிவால் அலசப்படும் அத்தனை இலக்கியங்களும் நடைமுறைக்குப் பயன்படுத்து வதாகில் அவை எங்கள் அன்பை மேலோங்கச் செய்ய வேண்டும். அன்பு ஆதரவான வார்த்தை களால் கூட வெளிவரலாம். பகை களைதலே அன்பைப் பரப்ப உதவி செய்யும். அழிவிலிருந்து ஆக்கத்தை ஏற்படுத்துவதும், அன்பை மேலோங்கச் செய்வதுமே எங்கள் இனிவரும் பணியாக மலர வேண்டும்.

இன்னல் உற்றவர்களின் நலன்கருதி, இதய சுத்தியுடன் இடர் ஒழிப்புப் பணிகளில் ஈடுபடுவதே எங்கள் சமயப் பயிற்சியின் சான்றாக அமையும். அறிவு இலங்கியங்களின் அதி முக்கிய சாரமாய் விளங்கும்.

எந்த வேற்றுமையும் பாராட்டாது, மக்களின் இடர் அகற்றும் பணிகளில் எங்களை இக்கால கட்டத்தில் அர்ப்பணிப்போமாக!

ஒன்றுபடுதல் மானுடப்பண்பு. மனித இயலின் பரந்த நோக்கும் அதுவே. ஆகவே, பகை மையை வளர்க்க வழிகோலாது, இன வேற்றுமை, சிந்தனைகளுக்குப் பலிக்கடாக்கள் ஆகாது, மனித நேயத்திற்கு வித்திடுவோமாக! இன்னல்களின் இடர்ப்பாடுகளில் இருந்து இதய சுத்தியுடைய ஒரு புதிய சமூதாயத்தை உருவாக்க இந்நாட்டின் சகலரும் பாடுபடுவோமாக! இனியாவது, இயற் கையை ஒன்றி வாழப் பழகுவோமாக! வேற்றுமையை வேரறுத்து ஒற்றுமையைப் பேணுவதே இயற்கை நிலை. இயற்கை அன்னையும் பிரிந்துகிடக்கும் தன் பிள்ளைகள் சேர்ந்து வாழ வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றாள்.

இறைவா! எங்கள் பணிகளை நீயே முன்னின்று நடத்துவாயாக! அன்பினில் எங்கள் அனைவரையும் சங்கமப்படுத்துவாயாக!

**நன்றி**:
*தினக்குரல், 05 ஜனவரி 2005*

# வருகிறது தவக்காலம்!



*எதிர்வரும் பெப்ரவரி 09ம்திகதி திருநீற்றுப்புதன். கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவு கூரும் தவக்காலம் ஆரம்பமாகிறது. வெள்ளப்பெருக்கு, கடல்கோள், முடிவில்லாத சமாதான முயற்சிகள் என்று பல்வேறு துன்பங்களுக்குள் சிக்கியிருக்கும் நாம் கிறிஸ்துவின் திருப்பாடுகளின் வழியே நமது துன்பங்களுக்குப் பொருள் காண்பதும் மீட்பில் நம்பிக்கை கொண்டு வாழ்வதும் அவசியமானதமாகும்.*

*தவக்காலத்தையொட்டி திரு நிற்றுப்புதன் அன்றும் தவக்கால வெள்ளிகள் தோறும் இலங்கை வானொலி தேசிய சேவையில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன என்பதை நேயர்களுக்கு அறியத் தருகின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு வருவதெப்போ

**கவிஞர் செ. குணரெத்தினம்**

பாவச் சிலுவையைச் தோளில் சுமந்தனை
பரிசுரித்த மாக்கியவா! - உன்
பாதை நடந்திடாப் பாவியர் தோளிலும்
பாவச் சிலுவையைப் பார்!

மானிட ஜென்மங்கள் ஏன் புவி மீதிலே
மனிதத்தைத் தொலைக்கிறது? - மத
ஞானிகள் காட்டிடும் பேரொளிப் பாதையில்
பயணிக்கத் தயங்கிறது?

போதனை ஆயிரம் பேதங்கள் சொன்னாலும்
போர்க்குணம் மாறாதவர் - நிதம்
வேதனை சூழவே வாழ்ந்திடும் பேரெலாம்
வாழ்க்கையில் தேறாதவர்!

தேவனே நீயின்று பூமியில் மனிதனாய்த்
திருக்கோலம் புனைந்திருந்தால் - இந்தப்
பாவிகள் முன்னாலே பாரச் சிலுவையைப்
பலமுறை சுமந்திருப்பாய்!

தூய்மையாய் வாழ்ந்திடத் துணியாதபேர்களின்
தோளில் சிலுவை கண்டேன் - இந்தத்
தீயவர், வாழ்விலே திருந்தி நடந்திட
தேவனே வேண்டுகின்றேன்.

பூமிக்கு மீண்டும் நீ நீதிவழங்கிட
புறப்பட்டு வருவதெப்போ? - ஐயா
பாலனாய்ப் பிறந்தயிப் பரிசுத்த நாளாச்சும்
பூமிக்கு வந்திடப்பா!

# பாலன் பிறந்தார்



பாலன் பிறந்த செய்தியொன்று சொல்லிடக் கேளும்
பாரில் உள்ளோர் பாவம் போக்கும் பரமனைப் பாரும்
வானதூதர் கானம் பாடப் பூமி வந்தனர்
வானகத்தில் தேவனுக்கு மகிமையென்றனர்
பூவுலகில் நன்மனத்தோர்க் அமைதி கூறினர்
இடையர் கேட்டு ஓடிச் சென்று வணங்கி நின்றனர்
தூரதேச மூவரசர் சோதி கண்டனர்
வேதநூலை வேகமாகப் புரட்டிப் பார்த்தனர்
பெத்தலகேம் ஊரிலேதான் பிறப்பா ரென்பதை
சுத்தமாக அறிந்து அங்கு போக வந்தனர்
தலைநகராம் ஜெருசலேமை வந்தடைந்தனர்
தலைவனேரோதன் தன்னை நாடிச் சென்றனர்
யூதர்கட்கு அரசன் எங்கே என்று கேட்டனர்.
யூதேயா நாட்டையாள்வோன் கலங்கிப் போயினன்
பீதி கொண்ட ஏரோதன் சபையைக் கூட்டினான்
வேதநூலில் உள்ளபடி பெத்தலேகம்தான்
யூதராசன் பிறப்பிடமாம் என்று கூறினர்
கள்ளமன ஏரோதென்ன சொன்னான் தெரியுமா?
உள்ளன்போடு நானுமங்கு செல்வேனாகையால்
நீங்கள் பெத்தலேகம் சென்று பார்த்த பின்னாலே
நாங்களுமே செல்வதற்கு வழி சொல்லுங்களே
ஜெருசலேமின் வாசல் தாண்ட என்ன நடந்தது
சோதி மீண்டும் தோன்ற மூவர் சென்றார் பின்னாலே
பாலனுடன் மரியாள் சூசை தன்னைக் கண்டனர்.
தூபம் வெள்ளி போளவுடன் பாதம் பணிந்தனர்
தூய வெள்ளி திசை திரும்ப ஊரை அடைந்தனர்
காத்திருந்த ஏரோதன் கவலை கொண்டனன்
கள்ளமற்ற பாலர்களைக் கொல்லச் சொல்லினன்.
தேவதூதன் சூசை முனி கனவில் தோன்றினான்.
தேவதாய் குழந்தையுடன் எகிப்தை ஏகினான்.

**றெஜினாவதி சிதம்பரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவப் பொன் விழாக்காணும் ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகை

(எஸ். எம். யோசவ்)

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயரும், நமது மறைமாவட்டத்தின் முதலாவது சுதேசிய ஆயருமான பேரருள் தந்தை எல்.ஆர். அன்ரனி ஆண்டகை கடந்த ஆண்டு டிசம்பம் மாதம் ஏழாம் திகதி (2004- 12- 07) தமது குருத்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டுகளை நிறைத்து பொன்விழாக் கண்டார். இதனையொட்டி சிறப்பு நிகழ்வும், பொன்விழா மலர் வெளியீடும் கடந்த டிசம்பர் 15ம் திகதி திருகோணமலையில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், துறவிகள் மற்றும் அன்புக்குரியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பொன்விழா நாயகரான ஆயர் அவர்கள் ஆழ்ந்த பக்தியும், செப, தியான வாழ்வில் மிகுந்த ஈடுபாடும் கொண்டவர். அவரிடம் விளங்கிய அரிய நற்பண்புகள் அனைவராலும் விதந்து பேசப்பட்டவை. தமது சாட்சிய வாழ்வால் அனைவருக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும் ஆயர் அவர்களுக்குத் தொண்டனும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆயர் அவர்கள் ஆரோக்கியத்தோடும், நற்சுகத்தோடும் பல்லாண்டு வாழவேண்டுமென பிரார்த்திக்கிறது.



யாழ் மறை மாவட்டத்திற்கும் திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கும் ஆயர்களைத் தந்து மங்காப் புகழுக்குப் பாத்திரமான ஊர் கரம்பன். வளங் கொழிக்கும் பூமியாகிய கரம்பனில் ஆலயப் பணியில் அர்ப்பணிப்போடு செயற்பட்ட மரியப்பிள்ளை இராஜேந்திரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாகப் பிறந்தவர்தான் எல். ஆர். அன்ரனி இராஜசூரி. சூரி என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர் பிறந்த மூன்று மாதத்தில் தந்தையை இழந்தார். ஆயினும் சகோதரர், சகோதரிகளின் அரவணைப்பில் அன்போடு வளர்ந்தார்.

கரம்பன் புனித செபஸ்தியார் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப்பெற்று, பின் காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தபோது இறைவனின் அழைப்பை ஏற்று குருமடத்தில் சேர்ந்து யாழ். பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வி பெற்றார். கண்டியில் குருத்துவக் கல்வியை மேற்கொண்ட இவர் உரோமாபுரிக்கு உயர்தர குருத்துவக் கல்விக்காக அனுப்பப்பட்டார். உரோமாபுரியில் இவர் 1954ல் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு நாடு திரும்பினார். யாழ். ஆசனக் கோவிலிலும், பின் தோலகட்டிப் பங்கிலும் நாரந்தனைப் பங்கிலும் பணியாற்றினார். சில காலம் திருமலை-மட்டுநகர் ஆயர் இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகையின் செயலாளராகப் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றினார். இறைப்பற்றும் மரியன்னையின் மேல் மிகுந்த பற்றும், இயல்பாகவே அமைதிப் போக்கும், எளிமையும் கொண்ட குருவாக விளங்கினார்.

1968ம் ஆண்டு ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் துணை ஆயராக நியமனம் பெற்று 21.11.1968ல் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு திருமலை-மட்டுநகர் துணை ஆயராக நியமனம் பெற்ற இவர் 1974ல் திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயராகப் பதவி உயர்வு பெற்றார். திருமலை-மட்டுநகர் மாவட்டத்தின் முதல் தமிழ் ஆயர் என்ற பெருமைக்கு உரித்துடையவரானார். அமைதியின் அண்ணல் என்று எல்லோராலும் அறியப் பட்டவர் ஆண்டகை அன்ரனி. மரியன்னையின் மேல் மிகுந்த பற்றுள்ளவர். தோலகட்டி துறவிகள் வாழ்க்கை யில் ஈடுபாடுடையவராகவும் அச் சபையில் இணைந்து கொள்ளும் ஆவலும் அவருக்கிருந் ததென அறிய முடிகிறது. ஆயினும் மேய்ப்புப்பணி இவருக்கு இறைவனால் திட்டமிடப் பட்டிருந்தது.

1983ம் ஆண்டுவரை திருமலை-மட்டுநகர் ஆயராக சுமார் பத்து ஆண்டுகள் அரும் பணியாற்றி இளைப்பாறியபின் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார். குருவாகி 50 ஆண்டுகள் நிறைவுகாணும் ஆயர் பிரமாணிக்கமுள்ள இறைபணியாளனாக வாழ்ந்தார். எடுத்துக்காட்டான, முன்மாதிரி கையான குருவாகவும் அர்ப்பணிப்போடு மேய்ப்புப் பணிபுரிந்த ஆயராகவும் வாழ்ந்து எழுபத்தேழு வயதிலும் ஆன்மீகப் பணியில் மிகுந்த வாஞ்சையுடன் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகின்றார்.

செப வாழ்வும் அடக்கமும் எளிமையும் ஆன்ம வாஞ்சையும் அன்புள்ளமும் கொண்ட ஆயர் உடல் நலத்தோடு இன்னும் பல்லாண்டு வாழப் பிரார்த்திப்போமாக. ஆயர் குருவாகவும் ஆயராகவும் ஆற்றிய பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவது நம் கடனாகும். யாழ் மறைமாவட்டமும் திருமலை-மட்டுநகர் மறைமாவட்டமும் ஆயரின் பணிகளால் பெற்றுக்கொண்ட இகபர நன்மைகளை நினைவுகூர்ந்து இறைவனைப் புகழ்ந்து, நன்றிகூறுகின்றது. கரம்பன் ஊரின் பெருமைக்குரிய குருதிலகத்தைப் பங்கு மக்கள் இத்தினத்தில் பாராட்டி மகிழ்வது தகுமே. கரம்பனூரின் அரும்புதல்வா! நிவீர் நீடூழி வாழ்க.

நன்றி: குருத்துவப் பொன்விழா மலர்

**தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நத்தார், புத்தாண்டு மற்றும் தமிழ் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரித்துக்கொள்கிறோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசை ஒன்று கோயிலாகிறது

கிழக்கில் உதித்த
சூரியன் கிறீஸ்து
விளக்கு நீ
உன்னை
வணங்குகிறேன்

கலிலேயா
பலஸ்தீனத்தின்
ஒரு கண்டம்
இங்கிருந்து ஒரு
குடும்பம்
பெத்லகேமிற்கு
இடம் பெயருகின்றது.

அறிந்து கொள்க
அகதி வாழ்க்கை
புதியதல்ல
இந்தப் பூமியிலே.

இறைவனே
இங்கு வந்தாலும்
இதுதான் நிலைமை.

இறுதியாக
குடிசையொன்று
கிடைக்கின்றது.
அங்கு
சூசையின் குடும்பம்
குடியேறுகின்றது.

நள்ளிரவு ...
நித்திரைக் கடலில்
உலகம் நீந்தும் வேளை
மரியாள் என்னும்
மங்கல விளக்கிலிருந்து
ஒளி உதயமாகின்றது.

இரவைப் பகலாக்கும்
இரசவாதம்
நடைபெறுகின்றது.
ஆகாயம்
ஆரோகணம்
பாடுகின்றது
அவனியோ
அவரோகணம்
இழுக்கின்றது.

சரித்திரம்
தாவீதின் வாரிசைத்
தத்தெடுத்துக்
கொள்கிறது.

புதுமையான
வெள்ளிப் பூவொன்று
வாழைத்தோட்டத்தில்
புஷ்பிக்கின்றது.

முப்போதும்
உணர்ந்த ஞானியர்
மூவருக்கு அப்போது
விளங்குகின்றது.

வானம் தந்த விளக்கில்
அவர்கள்
வழிப்பயணம்
தொடர்கிறது.

அங்கே ....
தங்க விக்கிரகமாக
அந்தத் தளிர்

பூட்டிய விலங்குகள்
பொடிப் பொடியாக
நாட்டினர்க் கெல்லாம்
நம்பிக்கை ஒளியாக
ஏழையை மாளிகையில்
இருத்திவிட
சுதந்திர பூமியில்
சொர்க்கம் படைக்க

சாவைப் பார்த்துச்
சவால் விட
அந்தக் குழந்தை
ஆயத்தமாகிறது.

வானத்தைப் பூமி
வணங்குகிறது
குடிசை ஒன்று
கோயிலாகின்றது.

**- வாகரை வாணன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்குள் பிறக்கும் கிறிஸ்து

அருள். சகோ. பிரைனர் செலர்



இறைவன் - மனிதர், விண்ணகம் - மண்ணகம், ஆன்மீகம் - உலகியம், புனிதம்- மனிதம் என்பவற்றை எதிர் முனைப்படுத்துவது பலரது சமயவாழ்வுக்கு அடிப்படையாக இருக்கும் தவறான புரிதல். அதாவது மனிதத் தன்மை குறையக் குறையத் தான் தெய்வத் தன்மை வளரமுடியும்; இந்த மண்ணைத் துறந்து தான் விண்ணை அடைய முடியும்; உலகியல் ஈடுபாடுகளை அகற்றினால்தான் ஆன்மீகத்தில் சிறக்கமுடியும்; மனித உணர்வுகளையும் உறவுகளையும் மறுத்துத்தான் இறை உணர்வு, உறவு எனும் புனிதத்தில் வளர முடியும் எனும் வகையிலே அவர்களுடைய எண்ணமும் செயல்பாடும் அமைகின்றன. இதனால் இறைவனைத் தேடுகின்ற பலர் மனிதர்களைப் பற்றி அதிகம் கவலைப் படுவதில்லை; விண்ணகம் செல்லும் முயற்சியில் இந்த மண்ணுலகை மறந்து விடுகின்றனர். ஆன்மீகவாதிகள் பலர் கோயில் வழிபாடுகளிலும் பக்தி முயற்சிகளிலும் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அக்கறையையும் சமத்துவ - சகோதரத்துவ சமூக உருவாக்கத்தில் காட்டுவதில்லை. புனிதத்தை அடைய முயலும் பலர் வறுமை, நோய், அறியாமை, இயலாமை எனும் கொடுமைகளுக்கு ஆளாகிப் புண்பட்டுக் கிடக்கும் மனிதர்களைக் கண்டுகொள்வதில்லை.

இத்தகைய சமயவாழ்வுக்குச் சவாலாக அமைகிறது, நாம் கொண்டாடும் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழா. ஊருக்கு வெளியே, மாட்டுத் தொழுவத்திலே, கந்தைத் துணிகளில் பொதியப்பட்டு விலங்குகளின் தீவனத் தொட்டியில் கிடத்தப் பட்டிருக்கும் மனிதக் குழந்தை இயேசுவைத் தெய்வமாக நாம் கொண்டாடும் விழா இது.. இவ்விழா சொல்லும் அர்த்தங்கள், விடுக்கும் அறை கூவல்கள் ஆழமானவை: நம் மரபு, ஆன்மீகம், சமயச் செயல்பாடுகள் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்குபவை. புதிய அருள் வாழ்வுக்கும் சமயச் செயல் பாட்டுக்கும் அழைக்கும் புரட்சிக்கர ஆற்றல் உடையவை.

மனிதத்தில் மலருவதே தெய்வம்; மண்ணில் வளருவதே விண்ணகம்; அன்பு உறவுகளில் வளருவதே ஆன்மீகம்; புதிய சமத்துவ சகோதரத்துவ சமூகம் படைக்கும் அர்ப்பணத்தில் அரும்புவதே புனிதம் என்பன அது சொல்லும் ஆழமான, அழுத்தமான செய்திகள். ஆம், தெய்வம் விண்ணின் தொலைவிலே விலகியிருப்பவர் அல்ல. அவரது ஆட்சி இந்த மண்ணையும் மனிதரையும் விட்டு வேறு எங்கோ சொர்க்கத்தில் மலருவதும் அல்ல; கடவுள் நம்மோடு. அவர் இந்த மண்ணிலே குடியிருப்பவர்; மனிதரிலே உள் உறைபவர்; மானிட வரலாற்றிலே உடன் நடப்பவர். குறிப்பாக, செல்வமோ, செல்வாக்கோ, அதிகாரமோ, சமூக உயர்வோ இன்றி ஏழைகளாக, தாழ்த்தப் பட்டோராக, ஒதுக்கப்பட்டோராக, ஆற்றல் அற்றோராக இருப்போரிடம் அவரது உடனிருப்பு சிறப்பாக உள்ளது. கிறிஸ்து பிறப்பு விழாவின் சிறப்புச் செய்தி இது.

எனவே ஏழ்மை, அறியாமை எனும் புழுதியில் புண்பட்டுக் கிடக்கும் மனிதர்களை வாழவைப்பதன் வழியாகத்தான் நாம் இறைவனை உண்மையில் வாழ்த்துகின்றோம், வழிபடுகின்றோம். உண்மை மனிதர்களாக வாழ்வதன் வழிதான் நாம் உயர்ந்த புனிதர்களாகின்றோம். இந்த மண்ணகத்து சமூகங்களைக் குடும்பங்களை நலமாக்குவதன் வழியாகத்தான் நாம் விண்ணகத்தை இங்கு மலர வைக்கின்றோம். ஏழைகளைச் சந்திப்பதன் வழியாகத்தான் நாம் இறைவனுக்கு மாட்சி அளிக்கின்றோம். ஆம், உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சி என்பது மண்ணகத்தில் மனிதருக்கு உண்மையான நிறைவான அமைதியே அன்றி வேறேதும் அல்ல!

"கிறிஸ்து பிறப்பு விழா கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழ்ந்த உடன்படிக்கையின் மகிழ்ச்சிப்பாடலாகும்"

அன்பின் உறவினைப் பகிர்ந்திடும் நேரம்
இறைவன் வரவினால் புதுவாழ்வு மலரும்
கூடித்தொழுவோம், பாடி மகிழ்வோம்
மனங்கள் இணைந்து இறையை வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமகனே துணைபுரிவார்

வானுயர எழுந்து மேகம்
வலம் வருமே பவனியாக
இடையிடையே மின்னலது
இசைகூட்டி முழங்க வானம்
அலைமோதி ஆழ்கடலும்
ஆனந்தக் களிப்படைய
இறைமகனின் வரவதனால்
இயற்கையுமே இனிமையீட்டும்.

கானுயர்ந்த சோலைகளும்
காடடர்ந்து இசைதரவே
தேனடர்ந்து மலர்களுமாய்
தென்றலுமே உறவு கொள்ள
பூவடர்ந்த மலர்ச்சோலை
புன்னகையைக் கட்டவிழ்க்க
வானிறங்கி வந்தவரை
வரவேற்க முன்வருமே.

போர்முனையின் கோர ஒலி
புரியாமல் மறைந்து கொள்ள
வானடர்ந்த போர் மேகம்
மழையெனவே கரைந்தழிய
நீரடர்ந்த கண்களெல்லாம்
நின்மதியைக் கண்டுகொள்ள
வானிறங்கி வந்தவரே
வழிகாணத் துணைபுரிவார்

இடிபட்ட வீடுகளாய்
உடைபட்ட உள்ளங்கள்
அடிபட்டுச் சோர்ந்து விட்ட
அலுத்துவிட்ட வாழ்வுபல
விடைபெற்று நாட்டினையே
விட்டகன்ற உறவுகளும்
தடையின்றி வந்து சேர
தளைத்திடுமே அமைதி இங்கு.

போர் கண்ட வாழ்வு இன்று
புரிகின்ற அமைதிகளும்
விழி கொண்ட சோகங்கள்
விட்டகலும் காலமதாய்
பழி கொண்ட வாழ்வுகளால்
படிந்து விட்ட பாடம் பல
இழிந்து விட்ட நிலைமாற்ற
இறைமகனே துணைபுரிவார்.

அருட்பணி. N.C. அருள்வரதன்

## ஒரு மார்கழித் திங்களில்



ஒரு மார்கழித் திங்களின்
உதய வேளையில்
உன் மீது மட்டும் ஏன்
இருள் ஓடி வந்து
உட்கார்ந்து கொண்டது?

அரும்புகள்
இதழ் விரிக்கும் ~ அந்த
அழகிய காலைப் போதில்
அரும்பு நீ மட்டும் ஏன்
கருகி வீழ்ந்தாய்?

புட்களெல்லாம்
பூபாளம் பாடும்
புலர் காலைப் பொழுதில்
உனக்காக எங்களை
முகாரி பாட வைத்ததென்ன?

ஒவ்வொரு உயிரும்
துருதுருக்கும்
உற்சவ ஒளியில்
நீ மட்டும் நீண்ட துயிலில்
நிலைத்ததென்ன?

உன் வீட்டு முற்றத்தில்
ஒரு நாளும் காணாதவாறு
அத்தனை றோசாப் பூக்கள்
அன்று ஏன் மலர வேண்டும்?
உயிரற்ற உன் உடல் மீது
ஒரு மாலையாகவா?

உதய காலம் தான் உன்
அஸ்தமன காலமா?
அதுவும் ஒரு ஞாயிறு
வாரத்தின் முதல் நாள் ~ உன்
வாழ்க்கையின் இறுதிநாளா?

ஒன்றும் புரியவில்லை
மகளே ~ எனக்கு
ஒன்றும் புரியவில்லை

~ வாகரைவாணன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு யோவான்



மெசியா பிறப்பாரென்பதையறிந்திருந்த இஸ்ராயேலர் அது எப்போது என்று தெரியாமல் இருந்தனர். இதற்கெனச் செபித்துக் கொண்டிருந்தோர் ஏராளமாக இருந்தனர். இறைத்தந்தை, மெசியாவின் வருகையை மக்களுக்கு எசாயா, மீக்கா, மலாக்கி போன்ற இறைவாக்கினரூடாகக் காலத்துக்குக் காலம் அறிவித்து வந்தார். இவர்கள் எல்லாருக்கும் பின்னே இறுதியாக வந்த இறைவாக்கினராக, மெசியாவின் வழியை ஆயத்தப்படுத்தவென அனுப்பி வைக்கப்பட்டவரே திருமுழுக்கு யோவான்.

எசாயா இறைவாக்கினர் "அவருக்காக வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்காகப் பாதையைச் செம்மைப்படுத்துங்கள், பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது" என்று அவரைக் குறித்துக் கூறியுள்ளார். இவர் செக்கரியாவுக்கும், எலிசபேத்துக்கும் மகனாகப் பிறந்தவர். இவரது பிறப்பைத் தந்தைக்கு அறிவித்த வேளையிலே அவர் ஊமையாக்கப்பட்டார். இவர் பிறந்ததும், பெயரை எழுதியபோது வாய் கட்ட விழ்ந்து பேச ஆரம்பித்தார். எனவே இவ்விடயத்தாலும், பெற்றோரின் விருத்தாப்பிய காலத்தில் இறையருளால் பிறந்தவர் என்பதனாலும் இவரது பிறப்பு யூதரிடையே முக்கியத்துவம் பெற்றது.

இவர் மெசியாவின் வழியை ஆயத்தஞ் செய்ய வந்தவர். அதேவேளை, பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் ஒன்றிணைத்தவர் எனப்படுகிறார். மக்களைவிட்டு விலகிப் பாலைவனத்திலும், வனங்களிலும் வளர்ந்தவர் வாழ்ந்தவர். வெட்டுக் கிளியையும், காட்டுத்தேனையும் உணவாகக் கொண்டு ஒட்டக முடியாலான ஆடையை அணிந்திருந்தவர். தோற்கச்சையை இடையில் கட்டியிருந்தார்.

மக்களைப் பாவங்களுக்காக மனஸ் தாபப்படும்படி அழைத்தார். அதற்காக, யோர்தான் நதியில் திருமுழுக்குக் கொடுத்தார். இவ்வாறு மக்களுக்கு வழிகாட்டினார். வாழ்வின் எல்லா நிலையிலும் வாழ்ந்தோருக்கும் போதித்தார். சாதாரண மக்களை, வரி வசூலிப்பவர்களை, படை வீரர்களை, அவர் தம் போதனையால் மனமாற்றம் பெறச் செய்ய வேண்டுமென முனைந்தார்.

பொதுமக்களுக்கு- இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் என்றும், வரிதண்டுவோருக்கு- உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கதிகமாக எதையும் வேண்டாதீர்கள் என்றும், படைவீரர்களுக்கு- நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள் என்றும் போதித்தார். மெசியாவை அவர்கள் அதன்மூலம் வரவேற்க வேண்டுமென்பதற்காகவே இவ்விதம் போதித்தாரென எமக்குத் தெரிகிறது.


இவரது கையால் இயேசுவும் திருமுழுக்குப் பெற்றார். இவர் இயேசுவுக்கு உறவினர். இவர் குழந்தையாக அன்னை எலிசபேத்தின் வயிற்றில் இருந்தவேளையில், அன்னை மரியாளின் வயிற்றிலிருந்த இயேசுவை அறிந்து அக்களிப்பால் துள்ளினார். இவரது போதனை அதிகாரத்துடன் அமைந்தது. எனவே, தீயவர்கள் இவரை எப்படி அழிக்க முடியுமெனச் சிந்தித்தனர். இவ்வேளையில் ஏரோது தனது சகோதரன் மனைவியுடன் வாழ்ந்த வேளையில் இவர் அதைக் கண்டித்தார். இதனை விரும்பாத ஏரோதியாள் இவரை எப்படியொழிப்பது எனக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அதற்கான சந்தர்ப்பமும் வந்தது. ஏரோதின் சபையில் அவனது பிறந்தநாள் விழாவில் நடனமாடிய தன் மகளுக்கு அரசன் கொடுத்த வாக்குறுதியைச் சாதகமாகப் பாவித்தாள். மகளைத் தூண்டி விட்டுப் பரிசாகத் திருமுழுக்கு யோவானின்தலையைத் தருமாறு கேட்க வைத்தாள். மன்னன் திகைத்தாலும், கௌரவப் பிரச்சினை காரணமாக சம்மதித்தான். இவ்விதமாகத் திருமுழுக்கு யோவான் தலை துண்டிக்கப்பட்டு இறந்தார்.

-மெற்றிஸ்டா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் பிறப்பைப்
## புரிந்து கொள்வோம்



அகமகிழ்வோம் அக்களிப்போம்
மகிழ்ந்து கொண்டாடுவோம்.
இயேசுவின் பிறப்பு விழாவை
மகிழ்ந்து கொண்டாடுவோம்.

இது சத்தியத்தின் திருவிழா
சரித்திரத்தில் இடம் பெற்ற பெரு விழா
மனித சரித்திரத்தையே
கி.மு - கி.பி என வகுத்த பிறப்பு விழா.
கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல
மனித சமுதாயத்தினர் அனைவரும்
கொண்டாட வேண்டிய மக்கள் விழா.

பட்டாடைகள் பட்டாசுகள்,
ஆரவாரங்கள் குதூகலங்கள்,
ஜொலிக்கும் மின்னொளிகள்,
அலங்கார சோடனைகள்
எல்லாமே கொண்டாட்ட மயம்.
இந்தக் கொண்டாட்டங்கள் மத்தியில்
ஏன் பிறந்தேன் என்னும்
இயேசுவின் ஈனக் குரல்
காற்றோடு காற்றாய் அடிபட்டு போகிறதே தவிர,
அது யார் காதிலும் விழுவதில்லை:
யார் உள்ளத்தையும் தொடுவதில்லை.
அந்த இயேசுவின் ஈனக்குரல்
இதயத்தை தொட்டால்
இதயம் மாறிவிடும், இதயம் மாறினால்
இறையரசு தோன்றிவிடும்.

அந்த இறையரசில்
கீரியும், பாம்பும் ஒன்றாக விளையாடும்,
பூனையும் எலியும் கூடி மகிழ்ந்திருக்கும்
ஒன்றையொன்று பிடித்துத் தின்னும் மிருகங்கள்
மிகுந்த பட்சமுள்ளவையாயிருக்கும்.
அதே போன்று
முரண்பாடுள்ள மனிதர்களும்
மனிதத்தோடும் புரிந்துணர்வோடும்
வாழ்வில் நடை போடுவார்கள்:
அப்படி நடை போட வேண்டும்.
அது தான் இயேசுவின் கனா.
அதற்காகத்தான் இயேசு பிறந்தார்.
பிளவுபட்ட சமுதாயத்தையும்,
பிரிந்து போன சமூகத்தையும்
ஒப்புரவாக்க இயேசு இம் மண்ணிற்கு வந்தார்.

இயேசுவின் பிறப்பின் போது நடந்தது என்ன?
மூன்று ராஜாக்களான பிரபுக்கள் குலமும்,
வறுமைக் கோட்டின் கீழ் அல்லல் உற்ற
இடையர் குலமும் ஒன்றையொன்று சந்தித்தன.
அவர் பணியின் போது தாழ்த்தப்பட்டோரும்,
உயர்ந்த குடி மக்களும்
ஒன்றாகத் தரையில் அமர்ந்து உணவுண்டார்கள்.

அவர் இறந்தபோது எல்லா இனத்தவரையும்
தம் பால் ஈர்த்து ஒன்றாக்கினார்.
பெந்தக்கோஸ்தே நிகழ்வின் போது
பல மொழி பேசும் மக்கள்
பல்லின மக்கள் ஒன்றாக
ஒரே குலமாக இருந்து
தத்தம் மொழிகளில்
ஒரே இறைவார்த்தையைக் கேட்டார்கள்.
வேற்றுமையாயிருந்தார்கள்
ஆனால் ஒன்றாக வாழ்ந்தார்கள்.
ஆதிகாலத் திருச்சபை வாழ்க்கை முறை கூட
அதைத்தான் எடுத்தியம்புகிறது ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தம் பிறப்போடு கொண்டு வந்த
புதிய வானம் புதிய பூமி,
நிஜமாகாமல் நிழலாகிப் போய்விடுமோ
என்ற சஞ்சலம்தான்
மனித மனங்களில் உறையத் தொடங்குகின்றது.
இந்தப் பின்னணியில்
கிறிஸ்து பிறப்பு விழாவின் இந்நிகழ்வு,
புதிய நம்பிக்கை ஒளிக் கீற்றுக்களை
ஒளிரச் செய்கின்றன.
அந்தக் ஒளிக்கீற்றிலே
வருகின்ற செய்தி இதுதான்,
"அனைவரும் நல்ல மனம்
கொண்டவர்களாக வாழ்ந்தால்,
அமைதி பிறந்து விடும்.
புரிந்துணராத கணவன் மனைவிக்கிடையில்,
மன்னிக்க முடியாத சகோதரங்களுக்கிடையில்,
உறவுடைந்து போன உறவினருக்கிடையில்,
நம்பிக்கையிழந்த நண்பர்களுக்கிடையில்,
சகிக்க முடியாத சமூகங்களுக்கிடையில்,
சந்தேகம் கொண்ட சமயங்களுக்கிடையில்,
இனவாதமுடைய இனங்களுக்கிடையில்,
போட்டி மனம் கொண்ட நாடுகளுக்கிடையில்
அமைதி பிறக்க வேண்டும்.
உறவு மலர வேண்டும் ....

இவை யாவும் எட்ட முடியாத இலட்சியங்களா?
அல்லது அடைய முடியாத இலக்குகளா?
நற்செய்தியை நம்பி மனம் மாறினால்,
இயேசுவின்கனவுகள்
யாவும் நனவுகள் ஆகிவிடும்.
அப்பொழுது இயேசுவும் கானாவூர்
கலியாண வீட்டுக் கொண்டாட்டத்தில்
கலந்து கொண்டது போல,
அவரது பிறப்பு
விழாவை நாம் கொண்டாடும் போது
அவரும் நம்மோடு கலந்து கொண்டாடுவார்.
அத்தகைய கொண்டாட்டங்கள்
அர்த்தமுடையனவாயிருக்கும்.
எசாயா 2:4 சொல்வது போல,
"தங்கள் வாள்களைக்
கலப்பைக் கொழுக்களாகவும்,
தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும்,
அடித்துக்கொள்வார்கள்
ஓரினத்திற்கு எதிராக மற்றோர்
இனம் வாள் எடுக்காது"
மேற்கூறப்பட்ட இந்த நிலை
ஒரு திருப்பு முனையாக அமையுமென்றால்,
அது எவ்வளவு அதிசயமும்
ஆச்சரியமுமாயிருக்கும்.

இயேசு பிறந்த போது
வானவர் கொண்டு வந்த அந்த
இறைவார்த்தைக் கீதத்தை
உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.
"உன்னதங்களிலே கடவுளுக்கு
மகிமை உண்டாகுக,
உலகில் நல்ல மனத்தோருக்கு
அமைதியும் ஆகுக."

இயேசு கொண்டு வந்த
கிறிஸ்மஸ் பரிசு சமாதானமே
அந்தச் சமாதானம்
நல்ல மனதுடையவர்கள்
இதயங்களில்தான் இறங்கி வரும்:
அவர்களது இல்லத்தில்தான் அது தங்கும்:
அவர்கள் வாழும் நாட்டில்தான்
அதுகுடியிருக்கும்
உனக்குச் சமாதானம் வேண்டுமா?
உன் மனதை நல்ல மனதாக்கு.
உன் மனம் நல்ல மனமாக வேண்டுமா?
நற்செய்தியை வாசித்து நம்பு.
உன் மனம் நலமடையும்,
நலமாகும். உன் மனத்திற்கு
விண்ணகக் கொடையான
சமாதானம் இறங்கி வரும்.
அது உன்னோடும்
உன் குடும்பத்தோடும்
உன் நாட்டோடும் தங்கும்.
அப்போது உன் கொண்டாட்டங்கள்
யாவும் நிறைவுடையவையாக அமையும்.

- அருள் தந்தை A. தேவதாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 'ஓடும் தொடர் ஊர்தியில் ஒரு செவ்வி...'

இம்முறை வித்தியாசமான பேட்டி அநுபவம் எமக்குக் கிடைத்தது. ஒருவரைச் செவ்விகாணும்போது ஆறுதலாக அமர்ந்து, நிதானமாக உரையாடுவது உண்டு. ஆனால் இந்த நேர் காணல் வினோதமான முறையில் இடம் பெற்றது. ஆம், ஓடுகின்ற புகையிரதத்தில் வைத்து இப்பேட்டி இடம் பெற்றது.

அண்மைக்காலமாக, நாம் அடிக்கடி, இரவுத்தபால் புகையிரதத்தில் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்ல வேண்டி ஏற்பட்டது. பெரும்பாலும் உறங்கல் இருக்கையில் செல்வதுதான் வழக்கம். உறங்கல் இருக்கைப் பெட்டிகளுக்கு பொறுப்பாக ஒருவர் இருப்பார். அவர்தான் பயணச்சீட்டுக்களைப் பரிசோதிப்பார். பயணிகளின் பாதுகாப்புக்கும் அவரே பொறுப்பு.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக மாறி பலர் இக்கடமையில் ஈடுபடுவார்கள். பெரும்பாலும் அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்கள். அவர்களில் சிலர் கடமை நேரத்தில் மது போதையில் காணப் படுவார்கள். ஆனால் இவர்களில் ஒருவர் முற்றிலும் வித்தியாசமானவராகக் காணப்பட்டார். குடிப்பது இல்லை: வெளியாரைப் பெட்டிக்குள் வரவிடுவதில்லை. கோபப்படுவதும் இல்லை. இவர் எம்மைப் பெரிதும் கவர்ந்தார். எனவே அவரைத் தொண்டனின் சில நிமிடங்களுக்காக செவ்வி கண்டோம்.

**☞ : வணக்கம் ! உங்களை 'தொண்டனின் சில நிமிடங்கள் என்னும் பகுதிக்காக பேட்டிகாண விரும்புகின்றோம். காணலாமா....?**

☑ : சற்றுப் பொறுங்கள் சில வேலைகள் உள்ளன. முடித்துவிட்டு வருகின்றேன். (யன்னல்களை மூடும்படி கேட்டுக் கொள்கின்றார். சிலருக்கு மூட உதவி புரிகின்றார். அடுத்த நிலையத்தில் ஏறிய பயணிகளின் இலக்கத்தைப் பரிசோதித்து உரிய ஆசனத்தைக் காட்டுகின்றார்)

**☞ : உங்கள் பெயர் என்ன? உங்களின் பதவியின் பெயர் என்ன?**

☑ : எனது பெயர் எஸ். கிறிஸ்டோபர். எனது பதவியின் பெயர் 'ரயில்வே அற்ரன்டன்'.

**☞ : உங்கள் சேவைக்காலம் எவ்வளவு?**

☑ : நான் சுமார் 20 வருடகாலம் ரயில்வேயில் வேலை செய்கின்றேன். நான் அலுவலக உதவியாளராக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் பணிபுரிகின்றேன். உங்கள் இருக்கை பெட்டிகளின் 'அற்ரன்டன்' ஆக எங்கள் தர ஊழியர்களே பணிபுரிகின்றார்கள். அவர்களில் எவராவது 'லீவில்' நின்றால் பதில் கடமைக்காக நான் வருவதுண்டு.

**☞ : இக்கடமை உங்களுக்கு மகிழ்ச்சியான அநுபவமாக இருக்கின்றதா?**

☑ : ஆம், இதுவோர் வித்தியாசமான அநுபவங்களைத் தருகின்ற தொழில். தொழிலை நேசிக்க வேண்டும். அதே வேளை பயணிகளையும் நேசிக்க வேண்டும். பல்வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்ட பல்வேறு நபர்களையும் கவனமாகக் கையாள வேண்டும். தெய்வபயம் இருந்தால் எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்யலாம்.

**☞ : சில இருக்கைகள் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வரை ஆளில்லாமலே வருகின்றன. அவற்றை வேறு பிரயாணிகட்கு கொடுக்கலாம் தானே ....?**

☑ : இவ்வெற்று ஆசனங்கள் இருவகைப்படும். ஒன்று சீட்டுக்களைப் பெற்று பதிவு செய்து விட்டு கடைசி நேரத்தில் வராது விட்டால், அது வெறுமனே இருக்கும். ஆனால் அவ்வாசனத்தில் எவரையும் அமர்த்த இயலாது. சீட்டினைப் பெற்றவர் எந்த நிலையத்தில் வைத்து வேண்டு மானாலும் வண்டியில் ஏறலாம்.அடுத்தவகை பதிவு செய்யப்படாத இருக்கைகள்.

அவற்றை 'வேக்கன்ற் சீட்ஸ்' என்று கூறுவோம். அதற்கு வேறு நபர்களை அமர்த்தலாம். ஆனால் அவர்கள் அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத நிலையத்தில் அதற்கான பயணச் சீட்டை மிகுதிப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**☞ : வேறு சிலர், இவ்வாறான இருக்கைகட்கு சில தொகைகளைப் பெற்றுக்கொண்டு, இடம் கொடுப்பதாகக் கூறுகின்றார்களே...?**

☑ : அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னால் அப்படிச் செய்ய இயலாது.

**☞ : இத்தொழிலில் உங்களால் மறக்க இயலாத சம்பவங்கள் உண்டா?**

☑ : ஆம், பலவுண்டு. ஒருமுறை வவுனியா ரயிலில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் மிகவும் மது போதையில் வந்து ஆசனம் தரும்படி கேட்டார். என்னை அடிக்கவும் முற்பட்டார். நான் ஒருவாறு சமாளித்து அவரை அனுப்பி விட்டேன். ஆனால் அவர் பக்கத்தில் இருந்த 2ம் வகுப்பு உறங்கல் இருக்கைப் பகுதிக்குச் சென்று என்னைப்போன்று அங்கு கடமையில் இருந்தவரைத் தாக்கத் தொடங்கி விட்டார். அந்த ஊழியர் படுகாயம் அடைந்து 'கம்பஹா' புகையிரத நிலையத்தில் வைத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். மது போதையில் இருந்தவர் கைதுசெய்யப்பட்டார்: புகையிரதம் பல மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டது.

இது தவிர சங்கடமான வேறு அநுபவங்களும் ஏற்படுவதுண்டு. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். மழை பெய்யும் போது ஒழுகும். அதற்கு நாம் பொறுப்பு அல்ல வென்றாலும், பயணிகளின் முன்னிலையில் சங்கடந்தான்.

**☞ : உங்கள் பயணிகளில் ஒருவருக்கு சுகயீனம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?**

☑ : அடுத்த புகையிரத நிலையத்தில் வைத்து ரயில்வே கார்ட்' ஊடாக புகையிரத நிலைய அதிபரிடம் ஒப்படைத்து விடுவோம். புகையிரதம் ஒன்றிற்கு முழுப்பொறுப்பும் உடையவர் 'கார்ட்தான்'. அவருக்குத் திருப்தியென்றால் மட்டுமே புகையிரதத்தைப் பொறுப்பு எடுப்பார்.

**☞ : உங்கள் குடும்பத்தினர் எங்குள்ளனர்?**

☑: மட்டக்களப்பு கருவேப்பங்கேணியில். அடுத்த நிலையம் வந்துவிடவே அவர் கடமையைப் புரியச் சென்றுவிட்டார். அவருக்கு நன்றி கூறிக் கொண்டு தொடர்ந்து நாமும் பயணித்தோம்.

**-ஆழியோன்-**

---



## 25 வருட முடிவில்லா வாழ்வின் நினைவஞ்சலி

**நிகழ்வு: 1980.01.14 நினைவு: 2005.01.14**

**அமரர்**
**பொன்னையா இஞ்ஞாசி செல்லத்துரை**

**மலர்வு: 1903.03.05**
**உதிர்வு: 1980.01.14**

வித்தும் நீ வேரும் நீ
வாழ்வும் நீ வளமும் நீ
ஊனும் நீ உளமும் நீ
வணங்குமெம் தெய்வமும் நீ

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"தேவதீபம்"
66/5 பாரதி வீதி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆதியாகமம் III<sup>ம்</sup> அதிகாரம்**
**மனிதனின் வீழ்ச்சி, பாவம், தண்டனை, வாக்குறுதி**

திருவிவிலிய ஆசிரியர் யாவே மரபின் கருப்பொருளைப் பயன்படுத்தி மனிதனின் முதற்பாவம், இறைவனின் தண்டனை, பின் மீட்பின் வாக்குறுதி அருளப்படல் போன்ற நிகழ்ச்சிகளை விளக்குகின்றார்.

சாத்தானாகிய பாம்பினால் பெண் சோதிக் கப்படுகிறாள். இங்கு பாம்பின் குறியை ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை அடையப்பயன் படுத்துகிறார். அக்காலத்தில் பாம்பினைக் கடவுளாய் வழிபட்ட மக்கள் யூத இனத்தைச் சுற்றி வாழ்ந்தனர். பாம்பு உற்பத்தியின், இனப்பெருக்கத்தின் கடவுளாக அவர்களால் கருதப்பட்டது. எனவே இக்கடவுள் வணக்கத்தில் பல பாவச் செயல்கள் இடம் பெற்றன. படைக்கப்பட்ட பிராணியாகிய பாம்பினை அவர்கள் கடவுளாக்கினர். இது உண்மைக் கடவுளை வழிபட்ட யூத இனத்துக்கு வெறுப்பை மூட்டி வேதனையைக் கொடுத்தது. இப்பாம்பு உண்மைக் கடவுளின் எதிரி, அருவருப்புக்குரியவன், பொய்யும் வஞ்சகமும் உடையவன் எனக் கருதினார்கள். இதனை வலியுறுத்தி தம் இன மக்களை அப்பொல்லாத வழிபாட்டிலிருந்து காப்பாற்ற, தீய சக்தியை, சாத்தானை, பாம்பு உருவில் சித்தரிக்கின்றார் ஆசிரியர். எனவே இப்பாம்பானது பசாசைக் குறிப்பதாக யூதரும், கிறிஸ்தவர்களும் இன்றும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

மேலும் சோதனை நிகழ்ச்சியானது ஒரு ஓவியமாகக் காட்டப்படுகிறது. பெண்ணுக்குப் பாம்பு கூறிய சொற்களில் வஞ்சனையும், சூழ்ச்சியும் தொனிக் கிறது. பெண் கடவுளையே சந்தேகப்படுகிறாள். அவள் எளிதாக ஏமாற்றப்படுகிறாள். கடவுளாக ஆசைப்படுகிறாள். கடவுளின் கட்டளையைத் தானும் மீறித் தன் கணவனையும் மீற வைத்து பாவத்திற்கு அடிமையாகின்றாள். மேலும் இங்கு ஒரு கனியை உண்ட காரணத்தால் கடவுள் முழு உலகையும் தண்டித்திருக்கமாட்டார், மாறாக விலக்கப்பட்ட செயலைச் செய்து கடவுளின் கோபத்திற்கு ஆளானார்கள் என்பதே உண்மை. அவர்கள் கடவுளைப்போல் ஆக முயற்சித்தார்கள். பாவத்தின் விளைவு உடனே மனிதனைப் பாதிக்கிறது. பரிசுத்த தனத்தை இழந்து, ஆபாசத்திற்கு அடிமையானார்கள், இறைவனுக்குப் பகையாய் மாறினார்கள் இறைவனுக்குப் பயப்படுகின்றார்கள். இறைவனின் குரலில் கோபம் தொனிக்கிறது போன்றவை கூறப்படுகின்றது.

கடவுள் பாம்பைச் சபிக்கிறார். பாம்பைக் குறிக்கும் சாத்தான் கடவுளால் சபிக்கப்படுகின்றான். வயிற்றினால் நகர்ந்து மண்ணைத் தின்னும் இழிவான நிலைக்குத் தள்ளப்படுகின்றான். அத்தோடு நின்று விடாமல் அதன் தலையை நசுக்க ஒரு மீட்பர் வர இருப்பதாகவும் வாக்களிக்கிறார். அவர் பாவத்தை வெல்வார் பசாசைத் தோற்கடிப்பார் மக்களை மீட்பார் எனவும் கூறப்படுகிறது.

அதாவது, ஆதாமோடு ஓர் உடன் படிக்கையும் செய்கிறார். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம் அவள் உன் தலையை நசுக்குவாள்". பெண்ணும் சபிக்கப்படுகிறாள். பெண்ணின் தனிப் பண்பு கணவனுக்கு அடங்கி யிருத்தலும் குழந்தைகளைப் பெறுதலும் ஆகும். இதிலும் "வேதனைகளுக்கிடையில் குழந்தை களைப் பெறுவாய், மனிதனின் அதிகாரத்துக்கு நீ அடங்கியிருப்பாய்" எனவும், மனிதனும் சபிக்கப் படுகின்றான். "கஷ்டப்பட்டு வேலை செய்து குடும்ப த்தைக் காப்பாற்ற வேண்டும்" என்றும் சபிக்கப் படுகிறான். இது பாவத்தின் பின்பு அவனுக்குப் பெரும் வேதனையாக இருந்தது. அவன் சாக வேண்டிய நிலை; தோட்டத்தில் நின்று துரத்தப் படுகின்றான். நோயும், துன்பமும், வேதனையும், மரணமும் தொடர்ந்தது. இயற்கையே துன்பமாக மாறியது. மேலும் கடவுள் அவர்களைத் துரத்தி னாலும் மனுக்குலத்தின் மீது தயவு காட்டப் பின்வாங்கவில்லை. தோல் உடையை உண்டாக்கி உடுத்தினார் என்றும், மீட்பரை அனுப்பி அவர்களை மீட்கச் சித்தம் கொண்டார் எனவும் கூறப்படுகிறது. எனவே இத்தகைய நிகழ்வுகளை இம் மூன்றாம் அதிகாரத்தில் சித்தரித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட மிகக் கொடிய கடற்கோள் என்று கூறப்படும் கடல் நீர்ப்பெருக்கால் தென்னாசிய நாடுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு முழு உலகையுமே இது அதிர்ச்சிக்குள்ளாக் கியுள்ளது.

இந்தோனேசியாவுக்குரிய சுமத்திரா தீவுகளுக்கு அண்மையில் கடலில் ஏற்பட்ட நில அதிர்ச்சியே பேரலைகளை உருவாக்கி தென்னாசிய நாடுகளைச் சிதைத்து, சின்னா பின்னப்படுத்தி ஆயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலி கொண்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது. உயிரிழப்பு மட்டுமே இரண்டு இலட்சத்தைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படும் போது இதனால் ஏற்பட்ட பொருள் இழப்புக் களையும் இனி ஏற்படப்போகும் பின் விளைவு களையும் சுலபமாகக் கணிப்பிட்டுவிட முடியாது பகுதிகள் கடற்கோளின் கோரப்பிடிக்குள் சிக்கிச் சீரழிந்துள்ளன. கிறிஸ்மஸ் பண்டிகையைத் தொடர்ந்து மக்கள் எல்லாம் சந்திப்பு, விருந்து, மகிழ்ச்சி என்று கூடிக்குலவிய ஒரு காலப்பகுதியில் சீற்றம் கொண்டு மலையெனக் கிளம்பிய பேரலைகள் என்ன நடக்கிறது என்று அறியு முன்னரே கடற்கரைப் பிரதேசங்களை முட்டி, மோதி, உடைத்து, நசித்து, வீசி எறிந்து கோரத் தாண்டவம் ஆடியுள்ளது. குழந்தைகள், பிள்ளைகள், பெண்கள், பெரியவர்கள் என்று அனைவரையும் அடித்து வீழ்த்தி வீடுகளை, கட்டிடங்களை மரங்களை மதில்களை எல்லாம் அடியோடு பெயர்த்தெறிந்த அந்த ஊழித் தாண்டவம் நடந்து என்னவோ சில நிமிடங்கள்தான். அதற்குள் எத்தனை அவலங்கள்! அழுகுரல்கள்!!

அலறல்கள்! நினைக்கவே பயங்கரமும்,

# துயரமாடிய 'சுனாமி'



சுனாமி என்று அழைக் கப்படும் இக் கடற் பேரலைகளால் இந்தோனேசியா, மாலைதீவு. ஈந்தியா, இலங்கை, தாய்லாந்து போன்ற பலநாடுகள் பெரியளவில் பாதிக்கப் பட்டுள்ளன.

இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். கடந்த இருபது ஆண் டுகளாக போராலும், இனப்படு கொலைகளாலும், வன்முறைகளாலும் அழிவுகளையும், இழப்புக் களையும் சுமந்து, மீளும் வழி தெரியாமல் விழி பிதுங்கி நின்ற இலங்கை நாட்டுக்கு சுனாமியால் ஏற்பட்டுள்ள பேரழிவிலிருந்து விடுபடுவது அத்தனை சுலபமன்று. இதன் தாக்கம் எத்தனை ஆண்டுகளை விழுங்கப் போகிறதோ தெரிய வில்லை.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பரிதவிப்பும் ஏற்படுகிறது. போரினால் பல்வேறு அழிவுகளைச் சந்தித்து தீராத் துயரத்துடன் வாடும் வடக்கு கிழக்கு மக்களை அடைமழை யும் கடல் அரக்கனும் விடாது தொடர்ந்து துரத்தித் துரத்தித் தாக்குவது ஏன்..? ஏன்..?!

மனித சக்தியை மிஞ்சிய இப் பேரழிவுக்கு கடலில் ஏற்பட்ட நில அதிர்ச்சி தான் காரணம் என்று அறிவியல் கூறிக் கொண்டது. இயற்கை என்பது மானுடத்தின் எதிரியல்ல. கடவுளின் திட்டப்படி இயற்கை எப்போதும் தன் போக்கிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் செயற்பாடுகள் எப்போதும் ஆக்கபூர்வமானவைதான். இரவும் பகலும் போல், கோடையும் மழையும் போல் மலையும் மடுவும் போல் அனைத்தும் உலகின் இருப்புக்கும், வாழ்வுக்கும் தேவையானதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் உண்மையான தாற்பரியங்கள் மனித அறிவுக்கு இப்போது புலப்படாமற் போகலாம். காலம் அவைகளைத் காட்டித்தரும்.

அதேவேளை அமைதியான - ஆக்க பூர்வமான இயற்கை ஆவேசம் கொண்டு சீறுவதற்கு அதன் சமநிலை குழம்புவதே காரணம். இவ்வாறு சமநிலை குழம்புவது பழங்காலத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறையே நடைபெற்றதாக வரலாறுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. ஆனால் நவீன காலத்தில் உலகின் எங்கோ ஒரு பக்கத்தில் அவ்வப்போது இந்த இயற்கை அனர்த்தங்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. மனிதன் இயற்கைக்கு முரணாகச் சிந்திப்பதும், வாழ்வதும் இயற்கை வளங்களை அளவுக் கதிகமாக அனுபவிக்கச் சுரண்டுவதும், அனைத்தையும் அடக்கி ஆளப் பேராசைப் படுவதுமே காரணம் என்று அறிவாளர் கூறுகின்றனர்.

எப்படியோ இக்கடற்கோள் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகிறது.

ஜனாதிபதி கூறியது போல் இனம், மதம், மொழி என்று வேறுபட்டு மோதிக்கொண்டிருந்த எம்மை இயற்கை வேறுபாடு பார்க்காது தண்டித்திருக்கிறது. அதனூடாக இயற்கை நமக்கு சமத்துவத்தை போதித்திருக்கிறது. இந்தச் சமத்துவம் என்பது ஓரினம், ஒரு மொழி என்பதன்று. மாறாக பல்வேறு மொழி, மத, இன அடையாளங்களை கொண்ட மக்கள் பெரும் பான்மை, சிறுபான்மை என்ற எண்ணிக்கை அடையாளங்களுக்கு அப்பால் அனைவரும் மாண்புடைய மனிதர்கள் என்ற அடிப்படையில் சமத்துவமாக நோக்கப்பட வேண்டும் என்பதுதான். இயற்கையில் உள்ள பலதரப்பட்ட படைப்புக்களும் ஒன்றோடு ஒன்று இணங்கி, ஒன்றை ஒன்று நிறைவு செய்து ஓருலகாய் இயங்குவதைப் போன்று மனித குலமும் நாட்டால், மொழியால், இனத்தால், நிறத்தால், மதத்தால் வேறுபட்டிருப்பினும் ஒருவரை ஒருவர் மதித்து, கௌரவித்து, இணங்கி, இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும்! இயற்கையும் நம்மை வாழ்த்தும்.

ஆனால் நடப்பது என்ன? கடற்கோள் வந்து நம்மைக் கதறக் கதற அடித்த பின்பும் எரிகிற வீட்டில் பிடுங்கிய கயவர்களாக பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைப் பொருட்களைச் சூறையாடுவதும், சிறுவர்களை, பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதும், நிவாரணப் பொருட்களை கொள்ளையடிப்பதும், பாதிக்கப்பட்ட மக்கள் பால் அக்கறையின்றி இருப்பதும் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்க மற்றொரு புறத்தில் இயற்கை அனர்த்தங்களையே அரசியலாக்கிச் செல்வாக்குப் பெறவும், வெற்றி வாகை சூடவும் கேவலமான இராஜதந்திர முயற்சிகள் நடைபெறுகின்றன. எப்போது விழுங்கலாம் என்று வாய் பிளந்து நின்ற வல்லரசுகள் நிவாரணப் பணி என்ற பெயரால் இந்நாட்டை இராணுவத் தளமாக்க முயற்சிக் கின்றன. நிவாரணப் பணிக்கு ஏட்டிக்குப் போட்டியாக போர்க் கப்பல்கள் நமது நாட்டை வலம் வருகின்றன. இலங்கையில் கடற்கோளினால் அதிகளவில் பாதிக்கப் பட்டவர்கள் வடக்கு கிழக்கு மக்களே. கடற்கோளுக்கு முன்பும் போரினாலும் இரு தசாப்தங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள்தான்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாகியும், புலம் பெயர்ந்து நாடோடிகளாகவும் அலைந்து திரிபவர்கள் இவர்கள்தான். அப்போது எந்த வல்லரசும் உதவிக்கரம் நீட்ட ஓடி வரவில்லை. தற்போது பேச்சுவார்த்தையில் சறுக்கல் ஏற்பட்டு நிலைமைகள் இறுகிப்போயுள்ள ஒரு சூழ்நிலையில் கடற்கோளின் பெயரால் யாரைப் பலப்படுத்த, யாருக்கு உதவி புரிய, யாருக்கு நிவாரணம் வழங்க ஆள், அம்பு சேனையோடு இவர்கள் தரையிறங்கி யுள்ளார்கள்? இருபது ஆண்டுகால யுத்தமும் அழிவும் அவலங்களும் அதுபோதாதென்று இயற்கை அனர்த்தமும் கூட இன்னும் நம் அறிவைத் தெளியவைக்கவில்லை என்றால் நம்மிடமுள்ள ஆதிக்க ஆசைகளையும் பதவி வெறிகளையும், இனக்குரோதச் சிந்தனைகளையும் அகற்றவில்லை என்றால் இறைவா! இந்த நாட்டை இனி யார் காப்பாற்றுவார்?

– மலர்வேந்தன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

சமாதானத்தை அடிப்படைக் கருத்தாக வைத்துக்கொண்டு வகை வகையான சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன. சமாதானத் திற்கான சண்டைமுடிந்து சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றன. அதுவும் கூட இடைநிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால் சமாதானத்திற்கான விளை யாட்டுப் போட்டிகள், கட்டுரைப்போட்டிகள், கவிதைப் போட்டிகள் என்பன தொடர்கின்றன. எமது உள்ளத்திற்குள் உள்ள சமாதானத்தைத் தொலைத்து விட்டு புற உலகில் எங்கெல்லாமோ சமாதானத்தைத் தேடிஅலைகின்றோம்.

ஓர் ஆசிரியர் வகுப்பு மாணவர்களிடம் கேள்வியொன்று கேட்டார். "நவக்கிரகங்களில் எமக்குத் தெளிவாகத் தெரியும் கிரகம் எது...?" சிலர் புதன் என்றனர்: வேறுசிலர் வியாழன் என்றனர்.
இவ்வாறாக மாணவர் பதில் கூறினர்.

ஆனால் ஆசிரியர் புன்னகைத்தார். "எமக்கு மிகவும் தெளிவாகத் தெரியும் கிரகம் பூமி அல்லவா...?

ஆனால் எவரும் அப்பதிலைக் கூற வில்லை. ஏனைய கிரகங்களின் பெயரைக் கூறிய நீங்கள், நாம் வாழும் பூமியைப் பற்றி கூறவில்லை" என்றார்.

இப்படித்தான் நாமும் நமக்குள்ளே இருக்கவேண்டிய ஒன்றை வெளியில் தேடுகின் றோம். நாம் ஒன்றைத் தொலைத்து விட்டால்தான் தேடுவோம். எம் உள்ளத்து அமைதியை இழந்து விட்டு வெளியில் அதனைத் தேடுகின்றோம்.

≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈ ≈

### நண்பரின் கதை இது

நண்பர் ஒருவரின் கதை இது! அவர் ஒரு இந்து அன்பர். நகைச்சுவை உணர்வு மிக்கவர்; ஓர் ஆசிரியர்: பல ஏக்கர் வயல் நிலங்களுக்குச் சொந்தக்காரர்.

நண்பருக்கு முதன் முதலில் ஆண் குழந்தை பிறந்தது. குடும்ப வழக்கின்படி சாத்திரம் பார்க்கப் போயிருக்கின்றார். சாஸ்திரக்காரர் சொல்லியிருக்கின்றார் - "ஐயாவுக்கு காலாட்டிக் கொண்டிருக்க சாப்பாடு கிடைக்கும்." - நண்பருக்கு பலத்த சந்தோசம். வயல் நன்றாக விளைச்சல் கிடைக்கப்போகின்றது என்ற எண்ணம்.

மூன்று வாரங்களிலேயே சாத்திரக்காரர் சொன்னமாதிரி நடந்ததாம். காலாட்டிக் கொண்டிருக்க சாப்பாடு கிடைத்ததாம். எப்படித் தெரியுமா ...? நண்பர் வீட்டுப் படிக்கட்டில் இடறி விழுந்துள்ளார். கால் முறிவடைந்து விட்டது. மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அவருக்கு கால்கட்டு போடப்பட்டு கட்டித்தூக்கி வைக்கப் பட்டிருக்க அவர் வலியில் காலை மெதுவாக ஆட்ட, மனைவி சாப்பாடு ஊட்டியிருக்கின்றார்.

ஆம்! ... காலாட்டிக்கொண்டிருக்க சாப்பாடு கிடைத்திருக்கின்றது.

மூன்றாண்டுகட்கு பின் ஒரு பெண் குழந்தைக்கும் தந்தையாயிருக்கின்றார் நண்பர். வழமைபோல் சோதிடம் பார்த்திருக்கின்றார் நண்பர். நண்பரின் வீட்டிற்கு வாகனம் வரப்போகிறது என்று சோதிடக்காரர் கூறியிருக் கின்றார். நண்பருக்கு பெரு மகிழ்ச்சி. ஏனெனில் அவர் வங்கியொன்றில், உழவு இயந்திரம் வாங்கு வதற்கான கடனுக்கு விண்ணப்பித்திருந்தார். கடன் வரும்: உழவு இயந்திரமும் வரும் என்ற ஆனந்தம்.

சரியாக இரண்டு மாதங்களில் வீட்டிற்கு வாகனம் வந்து விட்டது. என்ன இன உழவு இயந்திரம் வாங்கினீர்கள்?" என்று கேட்டேன். நண்பர் பெருமூச்சு விட்டவாறு கூறினார். நண்பரின் வீடு பிரதான வீதியில் அமைந்துள்ளது.

"உழவு இயந்திரம் எங்க வாங்கினது ...? றோட்டால போன அரிசி லொறியொன்று மதில இடிச்சுக் கொண்டு வீட்டு மண்டபத்துல வந்து நிண்டது. சாத்திரி சொன்னமாதிரி வீட்டுக்கு வாகனம் வந்துட்டுது".

இன்னும் சில ஆண்டுகளின் பின் இன்னொரு ஆண் குழந்தை பிறந்தது. இம்முறை சாத்திரம் பார்க்கப் போக மறுத்துவிட்டார். எனினும் மனைவியின் வற்புறுத்தலுக்கு இணங்க சாத்திரம் பார்த்தார். இம்முறை சாத்திரக்காரர் பிள்ளையைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்.

"பிள்ளை எப்பவும் வாழ்க்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியில்தான் இருப்பான்."

நண்பர் விரக்தியுடன் சொன்னார் "நான் இன்டைக்கு வேலைக்கு வரக்குள்ளயும் அவன் கொய்யா மர உச்சியில்தான் இருக்கான்."

இன்னொரு நண்பரின் கதையிது. இவரும் நகைச்சுவையுணர்வு மிக்கவர். நாசுக்காக பகிடி விட்டுப்போட்டு சிரிக்காமல் மெதுவாக கழன்று விடுவார்.

சுமார் ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு முன்னர் இந்திய விமானம் ஒன்றை கடத்திக் கொண்டு போய் "ஆப்கானிஸ்தானில் இறங்கி விட்டார்கள். சில தினங்களின் பின் கடத்தல்காரர்களின் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட்டதன் காரனமாக விமானம் விடுவிக்கப்பட்டது.

மறுநாள் இலங்கை தமிழ்த் தினசரி யொன்றின் தலைப்புச் செய்தி பின்வருமாறு காணப்பட்டது. "விமானக் கடத்தல் நாடகம் முற்றுப் பெற்றது : பணயக் கைதிகள் விடுதலை."


நண்பர் வாசித்துவிட்டுச் சொன்னார். 'அடக்கடவுளே, உண்மையாகக் கடத்திப் போட்டாங்க என்றுதான் நினைச்சனான், இது ஒரு நாடகம் எண்டு இப்பதான் தெரியுது'

## கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு



## புதிய ஒலி நாடா

# புதுயுகம் புலர்ந்தது







கிறீஸ்தவ ஒலி நாடாக்கள் பலவற்றை வெளியிட்டு வரும் A.P கிரியேஷன் தனது 19வது வெளியீடாக கிறிஸ்மஸ் கீதங்கள் அடங்கிய "புதுயுகம் புலர்ந்தது" என்ற ஒலி நாடாவை வெளியிட்டுள்ளது. சத்திய வசனம் நிறுவனத்தில் இசை இயக்குனராகப் பணியாற்றும் திரு. A.J. பொஸ்கோ அவர்களால் இசையமைக் கப்பட்ட இவ்வொலி நாடாவில் நம் நாட்டுக் கலைஞர்களான மகிந்தகுமார், சிவகுமார், நிலுக்ஷி ஆகியோர் பாடியுள்ளார்கள். இதன் பாடல்கள் அனைத்தையும் திரு. அம்புறோஸ் பீற்றர் எழுதியுள்ளார். திருவழிபாட்டில் பயன்படுத்தக்கூடியவையாக இவை அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவரது வெளியீடாக "திருப் பாடல்கள்" பாகம் 7, 8, 9 என்பனவும் "யோவான் நற் செய்தி" பாகம் 1, 2,3, என்பனவும் வெளிவந்துள்ளன.

கிறீஸ்தவ ஒலி நாடாக்கள் வெளியீட்டில் சாதனை படைத்து வரும் திரு. அம்புறோஸ் பீற்றர் கடந்த வருடம் தேசிய ரீதியாக "கத்தோலிக்க சமூகத் தொடர்பாளர்" விருதினையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வொலி நாடா "SKY MEDIA INTERNATIONAL" கலைக் கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரிசு

*சிறுகதை*

அந்த நகரத்திலேயே கௌரவத்திலும், அந்தஸ்திலும் சிறந்து விளங்கும் குடும்பம் 'டாக்டர் பாலேந்திராவின் குடும்பம்.

பாலேந்திராவின் ஒரே ஒரு மகன் நவீன், மருமகள் றோசி, இரண்டு பேரப்பிள்ளைகள் மனைவி எலிசபேத் எல்லோருமாக ஒரு வீட்டிலேயே வாழ்ந்து வந்தனர். வேலை முடிந்து கையில் ஏதோ ஒன்றை சுமந்து கொண்டு வந்த பாலேந்திரா''

நவீன்,.... நாளைக்கு உன் கல்யாண நாள் மறந்துட்டியாப்பா? இதுல உனக்கு புது 'டிரஸ்' இருக்கு எடுத்துக்கொள். அம்மா றோசி...." "கூப்பிட்டிங்களா மாமா?" "ஆம், இதுல உனக்கொரு பட்டுப் புடவை இருக்கு. நாளைக்கு காலையில நீ இத உடுத்திட்டு எல் லாருமா சேர்ந்து போகலாம். இத வாங்கிக் கொள்ளம்மா." "ஏன் மாமா உங்களுக்கிந்த வீண் சிரமமெல்லாம்!" "ஏனம்மா நீ இப்பிடிப் பேசுறா எண்ட சந்தோசமெல்லாம் எனக்கு நீங்கதானேம்மா! இதப்போய் சிரமமெண்டு" என்றவாறு றோசியுடன் பேசியவர் அருகில் நின்ற இரண்டு பேரப்பிள்ளை களையும் கையில் அள்ளிக் கொண்டு உள்ளே சென்றார்.

அன்றைய இரவு மங்களகரமாக விடிந்தது. விடியற்காலை 4மணிக்கே எல்லோருமாக எழுந்து குளித்து, முழுகி தடபுடலாக ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். திடீரென்று நவீனுடைய அறையிலிருந்து 'தடாரென்ற சத்தம் வந்தது. சத்தம் கேட்ட மறுநிமிடமே றோசி கூச்சலிட்டுக் கத்தினாள். பதறியடித்துக்கொண்டு அறைக்குள் ஓடிய பாலேந்திராவும், எலிசபேத்தும் அதிர்ந்து போனார்கள். தரையில் மல்லாக்காக விழுந்து கிடந்தான் நவீன். உடுத்தியிருந்த 'கோட்டையும், டையையும் உருவி எறிந்துவிட்டு 'டிரஸை மாற்றிய பாலேந்திரா நவீனைத் தூக்கி 'காரில்' ஏற்றிக் கொண்டு வேகமாக மருத்துவமனை சென்றார்.

'டாக்டர்' பாலேந்திராவைக் கண்ட மற்ற 'டாக்டர்கள்', தாதிமார்களெல்லாம் "என்ன 'டாக்டர்' உங்கட மகனுக்கு? என்ன நடந்தது ....? என்று பதறிபடி குவிந்து நின்றனர். அவசர அவசரமாக நவீனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போதுதான் நவீனுடைய இரண்டு சிறு நீரகங்களும் பாதிக்கப்பட்டிருந்த விஷயமே தெரிய வந்தது. நவீனுக்கு அடிக்கடி காய்ச்சல் வருவது வழக்கம். அதை அவன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. 'எக்ஸ்ரே ரிப்போட்டின்' படி நவீன் இன்னும் இரண்டு வாரங்கள் தான் உயிரோடிருப்பானென்னும் செய்தியை அறிந்த பாலேந்திரா துடித்துப்போனார். "ஓ .... மை காட்!, நான் ஒரு டாக்டராக இருந்தும் என் ஒரே ஒரு பிள்ளைக்கு இப்படியொரு நிலையா?'' "நோ.... நோ' நான்என் பிள்ளையை சாக விடமாட்டேன்." என்று தலையைக் கைகளால் பிசந்தபடி பற்களை நறும்பிக்கொண்டார். பொழுதும் சாய்ந்து கொண்டிருந்தது. வேர்த்து விறுவிறுத்து வீடு சென்ற பாலேந்திராவின் கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஓலமிட்டனர், மனைவி எலிசபேத்தும் மருமகள் றோசியும். "மாமா.... என்ட கல்யாண நாளதுவுமா நான் இந்த செய்தியா மாமா கேட்கணும்" "இல்லம்மா நான் உன் புருஷன சாக விட மாட்டேன். அவன எப்படியாச்சும் காப்பாற்றிக் கொடுத்திர்றேன். அழாதம்மா.... அழாத". என்றபடி மாறி மாறி ஆறுதல் கூறியவர் தன்னுடைய மனக் குமுறலையும் அடக்கிக் கொண்டு மறுபடியும் மருத்துவ மனை சென்றார்.

நவீனின் அருகிலிருந்து பாலேந்திராவே நுணுக்கமாக சிகிச்சை அளித்து வந்தார். ஒவ்வொரு நாட்களும் கழியக் கழிய பாலேந்திராவின் உயிரும் போய்ப் போய் வருவதுபோலிருந்தது. வேகமாக சிந்தித்துக் கொண்டிருந்தவர் சற்று நிமிர்ந்து பார்த்தார், அங்கே 'அக்சிடன்ட்' கேஸ் ஒன்றை அவசர அவசரமாக தள்ளிக் கொண்டு வந்தனர். அருகில் சென்று அதைப் பார்வையிட்டார் பாலேந்திரா. 30 வயது மதிக்கத் தக்க இளைஞன் ஒருவன் இரத்தக் கறைகளுடன் துடித்துக் கொண்டிருந்தான். "நேர்ஸ் என்ன ஆச்சு?" "டாக்டர் ரோட்டுல தாருத்திக்கொண்டிருந்த அப்பாவிப் பையன் மேல வாகனமொன்டு வந்து மோதிடுச்சு.இவன் பெயர் அன்ரனாம். இவன் பொக்கட்டுல இந்த 'ஐடன்டிக்காட்' மட்டும்தான் இருந்திச்சி . பாவம் இவனத்தேடி யாருமே வரயில்ல. " என்று கூறிய தாதியின் வார்த்தைகளைக் கேட்ட பாலேந்தி ராவின் மூளை 'கொம்பியூட்டர்' வேகத்தில் வேலை செய்யத் தொடங்கியது. "ஓ...! இதுதான் சந்தர்ப்பம் இதவிட்டா வேற வழியே இல்ல. கடவுளே என்னை மன்னிச்சிரு" என்று மனதுக்குள் திட்டம் தீட்டியவர் அந்த இளைஞனின் சத்திர சிகிச்சையை தானே பொறுப்பேற்றார். அந்த இளைஞனின் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீரகங்களையும் திருடி அதை தன் மகன் நவீனுக்குப் பொருத்தினார். அன்ரன் இறந்தான்; நவீனோ பிழைத்துக் கொண்டான். அன்ரனின் மரணத்தை யாரும் சந்தேகப் படாதபடிக்கு பாலேந்திரா சமாளித்துக் கொண்டார்.

மறு நாள் காலை 6 மணியளவில் மருத்துவமனை வாசலில் ஓர் இளம் பெண்ணும், மூன்று குழந்தைகளும் அல்லோலகல்லோமாக அழுது கொண்டிருப்பதை அவதானித்த பாலேந்திரா "ஓ....! இது அன்ரனின் யாருமாத்தான் இருக்கவேணும்" என்றபடி சற்று விறுவிறுத்தவராக அவர்களின் அருகே சென்றார். அது அன்ரனின் மனைவியென்பதையும், குழந்தைகளென்பதையும் யூகித்துக் கொண்டார். "அம்மா.... உன் புருஷனுக்கு தலையில பலமா அடிபட்டதினால எங்களால காப்பாத்தேலாமப் போய்ச்சு. எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்தோம் முடியல்ல. அழாதம்மா.... அழாத" பாலேந்திரா தன் மனசாட்சியை நொருக்கியபடி ஆறுதல் கூறினார். அதன் பிறகுஅந்தக் குடும்பம் என்ன ஆனது என்று அவருக்குத் தெரியாது.

ஒரு வாரம் கழிய நவீனுக்கு 'டிக்கட்டை' வெட்டி மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அது கிறிஸ்து பிறப்பின் காலம். மக்களெல்லாம் ஆரவாரத்துடன் காணப்பட்டனர். எல்லோரையும் விட பாலேந்தி ராவின் வீட்டில் மகிழ்ச்சி அதகமாகவே காணப்பட்டது. எப்படித்தான் இருந்தாலும் பாலேந்திராவின் மனம் அமர்க்களமாகவே போராடிக் கொண்டிருந்தது. மருத்துவமனை வாசலில் ஏழைக் கோலத்தில் காணப்பட்ட அன்ரனின் மனைவியின் முகமும், அந்தரித்து நின்ற அந்த அனாதைக் குழந்தைகளின் உருவமும் அவர் மனதை வாட்டிக் கொண்டிருந்தது. "அந்த ஏழைக் குடும்பத்தைத் தேடி கண்டு பிடிச்சு அவங்களுக்கு எப்படியாவது உதவி பண்ணனும்." என்று தீர்க்கமாக முடிவெடுத்தார்.

வீதி முழுவதும் பட்டாசுச் சத்தமும், மத்தாப்புக்களும் மின்னிக்கொண்டிருந்தன. 'காரை' எடுத்துக் கொண்டு அன்ரனியின் வீட்டைத் தேடிச் சென்ற பாலேந்திரா தூரத்தில் ஒரு குடிசை இருப்பதை அவதானித்தார். குடிசையின் உள்ளிருந்து வெளியில் வந்த அன்ரனின் மனைவி ரீட்டா "டாக்டர் ஐயா இஞ்ச நீங்க... உள்ள வாங்கையா" என்றபடி வரவேற்றாள். குடிசைக்குள் சென்றவர் உடைசல் கதிரையொன்றில் அமர்ந்து கொண்டார்." இருங்கையா குடிக்கிறதுக்கு ஏதாச்சும் கொண்டு வர்றேன்" என்றபடி உள்ளே ஓடினாள் ரீட்டா. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்த பாலேந்திரா சற்று நிமிர்ந்து பார்த்து அதிர்ந்து போனார்! அங்கே அன்ரனின் தாய் தெரேசாவின் படம் கொழுவப்பட்டிருந்தது. தெரேசா வேறு யாருமல்ல. 'டாக்டர்' பாலேந்திராவின் முன்னாள் காதலிதான்.

பாலேந்திரா டாக்டராகிய ஆரம்ப காலத்தில் அவர் பணிபுரிந்த மருத்துவ மனையில் தான் தெரேசா கங்கானியாகப் பணிபுரிந்தாள். பாலேந்தி ராவுக்கும், தெரேசாவிற்கும் காதல் தொடர்பு ஏற்பட்டது. இதனால் தெரேசா கர்ப்பவதியானாள். பாலேந்திராவின், தகுதி அந்தஸ்து என்பவை இருவரையும் பிரிவுக்குள்ளாக்கியது. தெரேசா குழந்தை வயிற்றுடனே பிரிந்து சென்றாள். பாலேந்திரா எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தும் தெரேசா கிடைக்கவில்லை. அந்தப் பழைய நினைவுகளை புரட்டி முடித்தவர் அன்ரன் தனது வாரிசு என்பதை உணர்ந்து கொண்டார். ஐயோ! கடவுளே! அன்ரன் என் பிள்ளையா! ஐயோ! என்ர பிள்ளைய நானே கொண்டுட்டேனா? ... நான் பாவி" இடி விழுந்தவரைப் போல் மனதுக்குள் கதறியவர் ஒன்றும் பேசாமல் 'காரை' எடுத்துக் கொண்டு விறுவிறுவென வீடு சென்றார். தலையில் கையை வைத்து மௌனமாகப் புலம்பியவர் " ....இனியும் என் பிள்ளையிட குடும்பம் அந்தரிக்கக்கூடாது. நவீன் மாதிரியே அன்ரனின் குடும்பமும் வசதியா வாழணும். நான் செய்த பாவத்துக்கு இதைக் கண்டிப்பாகச் செய்ய வேணும். என்ன நடந்தாலும் சரி என்று தீர்க்கமாக முடிவெடுத்தார். மனைவி, மகன், மருமகள், உறவினர்கள் எல்லோரும் தன்னை ஓர் ஈனப் புழுபோல் பார்ப்பதுபோன்ற ஓர் அவமானம். தனது கௌரவம் அந்தஸ்து காற்றில் பறப்பது போன்ற ஓர் அவமானம். தனது கௌரவம் அந்தஸ்து அனைத்தும் காற்றில் பறப்பது போன்ற உணர்வு. நான் செய்த கொடூரத்திற்கு இதுவெல்லாம் எனக்குத் தேவைதான்.... தேவைதான்... மனது ஓலமிட்டது. பயில் ஒன்றையும், பேனா ஒன்றையும் எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றவர் நடந்தவற்றையெல்லாம் தன் மனைவிக்கு கண்ணீர் கலந்த மடலாக வரைந்தார். தன் சொத்துக்களை எல்லாம் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதியை அன்ரனின் குடும்பத்துக்கு எழுதினார்.

அலைகடலாகக் கொந்தளித்துக் கொண்டிருந்த அவரது மனது இப்போது சிறிது ஆறுதலடைந்தது.

***R. தேவகுமார்***
*பாலையூற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் என்றால்...

'நத்தார்'' என்றால் என்ன? அதைப்பற்றி நாம் யாது நினைக்கின்றோம்? இதைப்பற்றிய ஒரு சிறிய சிந்தனை இதோ; இருள் - விலகவேண்டிய ஒன்று; விலக்க வேண்டிய ஒன்று; விரும்பப்படாத ஒன்று. எவருமே இருளை விரும்புவதில்லை. ஒருவர் வாழ்வில் இருள் காணப்பட்டால் அதைப்போக்கி, அவரை ஒளிக்குக் கொண்டுவர வேண்டும்; அதுவே அர்த்தமுள்ளது.

எம்பெருமான் இயேசுவும் இதையேதான் செய்தார். அதன்பலனாகக் காண்பதே ஒளிவாழ்வு. இந்த அனுபவம் பெற்ற நாமும், நமைச்சூழ இருள் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதனைக் கண்டுணர்ந்து அகற்ற முன் வரவேண்டும். அன்று இயேசு எவ்விதம் மனிதர் வாழ்வில் ஒளி யேற்றினார் எனப் பார்ப்போம்.



இயேசுவால் குருடன் பார்வை பெற்றான். திமிர்வாதக்காரன் குணமாகினான்; பெரும்பாடுள்ள பெண் குணம் பெற்றாள்; பேய் பிடித்தவன் விடுதலை பெற்றான்; தொழுநோயாளி சுகம் அடைந்தான். இவற்றிற்கும் மேலாக இறந்த சிறுமி, விதவையின் மகன், லாசர் உயிர் பெற்றனர். இன்னும் ஒருபடி மேலே பார்க்கப் போனால், பாவிகளாக இருந்த சக்கேயு, பாவிப்பெண் ஆகியோர் பாவமன்னிப்புப் பெற்று வாழ்வில் மாற்றத்தை அடைந்தனர். அனைவரும் ஒருவகையில் இருளில் நின்றவர்களே. அவர்களுக்கு ஒளி கிட்டியது இயேசு பெருமானால். அர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது மகிழ்ச்சி மிக்க தினம் அதுவேதான். பிறரது வாழ்வில் ஆறுதலை ஏற்படுத்த வேண்டும்; அவர்களது கஷ்ட காலத்தில் உதவியாயிருக்க வேண்டும்; மகிழ்ச்சியை அவர்கள் சுவைக்கச் செய்ய வேண்டும் அதுவே நத்தார் என்றால் அது மிகையில்லை.

இன்றைய உலகிலே இத்தேவையதிகம். ஏனெனில் எம்மைச் சுற்றித் தீமைதான் அதிகமாக உள்ளது. நாம் அத்தீமையில் மூழ்கிவிடாது போராடுவதும் ஒளி தேடும் செயல்தான்.

இந்தச் சூழ்நிலையில் நமது பங்களிப்பைப் பற்றிச் சற்று சிந்திப்போம். நாம் ஒளிதருபவர்களாக இருக்கவேண்டுமென்பதுதான்; இறைசித்தம். ஏனெனில், நாம் ஒளியின் மக்கள். ''தேவை எங்கேயோ, சேவை அங்கே'' என்பதினூடாக நாம் ஒளியைத் தர முடியும். எம்மால் எவரெல்லாம் மகிழ்வை, ஆறுதலைப் பெறுகின்றார்களோ, அவர்களது முகம் மலருகிறது. அவர்கள் ஒளி பெறுகிறார்கள். அப்படியென்றால் .... அதுதான் ஒளிவிழா; அதுதான் நத்தார்; ஏனென்றால் இயேசு கொண்டுவந்தது மீட்பையல்லவா?

இன்றைய உலகில் சுயநலம் கூடுதலான ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். தான், தன்சுகம், தன் குடும்பம், தன் பேரும் புகழும், தன் கௌரவம் என்று ஒரு பொய்யான சுற்றுவட்டத்தை உண்மையானதென நம்பி ஓடி ஓடி உழைக்கும் கூட்டம் அநேகம். தம்மால் பிறர் பாதிக்கப் பட டாலும் கவலையில்லை. தம் அயலார் கஷ்டத்திலிருந்தாலும் கவலையில்லை. இவர்களுக்கு ஆன்மா, இறை பணி, அயலான் அன்பு எல்லாம் வெறும் பெயர்ச் சொற்களே. ஆனால், இந் நிலை கிறிஸ் தவர்களாகிய எமக்குப் பொருந்த முடியாதவொன்றாகும்.

அயலான் அழ நாம் பார்த்திருப்பது நல்லதல்ல; அழகல்ல. துன்பப்படுபவனுக்கு ஆறுதல் சொல்லா திருப்பது அழகல்ல. இவை ஒரு பக்கம் நிகழ்ந்து கொண்டிருக்க, மறுபக்கம் நத்தார் விழாக்கள் வழக்கம் போல அதே திருப்பலி, அதே கரோல், அதே சிற்றுண்டி வைபவங்கள் என்று ஓடிக்கொண்டேயிருக்கின்றன. அதாவது, வழக்கமான பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடுகிறோம்.


மாற்றங்கள் இந்த ஆண்டில் ஏராளம்! நாம் உலக மாற்றங்களோடு பொருந்துகிறோம். ஆனால், ஆன்மீக மாற்றங்களில்லாது போனால் யாது பயன்? பிறர் வாழத் தம்மையே தந்தவர் இயேசு பெருமான். அவர் வழி செல்வது எம் கடன். எனவே, இந்த நத்தார் நாட்களிலும் நாம் சில தீர்மானங்களை எடுத்து நத்தார் என்றால் என்ன என்பதை நம் வாழ்வில் காட்டி உலகை ஒளி பெறச் செய்ய முயல்வோம்.

-மெற்றில்டா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ...



"உங்களோடு கூட இருப்பேன்" என்ற நம்பிக்கையை இறைமகன் இயேசு எங்களுக்குத் தந்துள்ளார். வார்த்தை வழியாக, சமூகம் வழியாக, வாழ்க்கை நிகழ்ச்சிகள் வழியாக எம்மோடு கூடவிருக்கின்ற இயேசு, நற்கருணை வடிவில் நிறைவான முறையில் விசேட விதத்தில் பிரசன்னமாயிருக்கின்றார். புனித கன்னி மரியாளின் கருவில் கருத்தரித்து உருவான அதே இயேசு, தசையாகவும், இரத்தமாகவும் நற்கருணையில் இருக்கிறார். இது கத்தோலிக்க திருச்சபையின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இந்த நற்கருணையில் உருவாகும் திருப்பலியே, திருச்சபையின் அடித்தளமும் சிகரமும் ஆகும். "திருச்சபையின் ஊற்று திருப்பலி: திருப்பலியின் உருவாக்கமே திருச்சபை" என்ற திருந்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூற்றுக்கமைய திருச்சபையை திருப்பலியிலிருந்தோ, திருப்பலியை திருச்சபையிலிருந்தோ பிரிக்க முடியாது.

திருச்சபையை உயிர் வாழ வைக்கும் திருப்பலியை, நற்கருணையை மாண்புடன் மதிக்கவும், நற்கருணையைப் பற்றிய சத்தியங்களை அறிந்து கொள்ளவும் நற்கருணை உருவாக்கும் "நற்கருணைச் சமூகத்தைப் பற்றி" சிந்தித்துச் செயல்படவும் இந்த ஆண்டையே அதாவது (ஐப்பசி 2004 - ஐப்பசி 2005) "நற்கருணை ஆண்டாக" பரிசுத்த பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

எங்களோடு கூட இருக்கின்ற குறிப்பாக நற்கருணையில் வாழ்கின்ற இறைமகன் இயேசுவை இந்த நற்கருணை ஆண்டில் சிறப்பான முறையில் வழிபட, நற்கருணை வார்த்தைகளை வாழ்வாக்க, (அடுத்தவருக்கு வாழ்வு கொடுக்க: எம்மைப் பிட்டு... பகிர்ந்து வாழ) நற்கருணைச் சமூகங்களை அதாவது அன்பியங்களை உருவாக்க திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட திருச்சபை அறைகூவல் விடுக்கின்றது. நற்கருணை (திருப்பலி) வடிவில் நம்மோடு இருக்கின்ற இறைமகன் இயேசுவின் இறைவார்த்தையில் நம்பிக்கை வைக்கிறோம். அந்த வார்த்தைகளை, அதாவது அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி அதைப்பிட்டு தம் சீடருக்கு அளித்துக் கூறியதாவது, "அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள், எனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்".

அவ்வண்ணமே ...

"அனைவரும் இதை வாங்கிப் பருகுங்கள், ஏனெனில் இது புதிய நித்திய உடன்படிக்கைக்கான என் இரத்தம்....."

மேற்கூறப்பட்ட தெய்வீக வார்த்தையை நம்புகின்றபோது, மெய்யாகவே இயேசுவின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்கிறோம். திருப்பலி முடிவுற்றதும் நற்கருணையில் தொடர்ந்து அவரது பிரசன்னம் இருக்கின்றதென்பது கத்தோலிக்கத் திருச்சபையின் படிப்பினையும் நம்பிக்கையுமாகும். ஆதித் திருச்சபையில் திருப்பலிக்கு சமூகம் கொடுக்க முடியாமல் இருந்த நோயாளருக்கு, இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவுமுள்ள நற்கருணையை வீடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள்.

"எங்களோடு கூட இருக்க வேண்டும்" என்ற ஆசையில் உருவாக்கப்பட்ட ஓர் அன்பின் அருட்சாதனமே நற்கருணைத் திருப்பலி ஆகும். எனவே திருப்பலி ஓர் அன்பின் நிகழ்வாகும். இந்த அன்பின் காரணமாக அவர் தம்மைப் பிட்டு அடுத்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமற்ற சகோதர சமூகத்தை உருவாக்கினார். திருப்பலியின் அடிநாதமாகிய சிலுவைப்பலியில் பங்கு கொண்டு நற்கருணையைப் பெறுகின்றவர்கள் இயேசுவைப் பாவமற்ற நிலையில் வாஞ்சையோடு பெற்று, அன்புள்ளம் கொண்டவர்களாக மாறி, நல்லதொரு நற்கருணைச் சமூதாயத்தை (அன்பியத்தை) அமைக்க அழைக்கப்படுகின்றார்கள். நாம் அமைக்கும் அந்தப் புதிய சமூதாயத்திலும் அவர் நம்மோடு கூட இருப்பார்.

**யோ. ஞானம்,**
*19, மின்சார வீதி,*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மரியாள் ஓர் அருள் விளக்கு

பிறக்கும் குழந்தைக்கு உலகம் புதிது. புலரும் பொழுதுக்கு நாள் புதிது. மலரும் வசந்தத்திற்கு பூக்கும் மலர்கள் புதிது. பிறக்கும் புத்தாண்டிற்கு என்ன புதிது ..? (புதியவை பலராலும் விரும்பப்படுபவை) பழையன கழிதலும் புதியன புகுதலும் மனிதருக்குப் புதிதல்ல. நடந்து முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும் நடக்கப்போகும் நாட்கள் எல்லாம் நல்லவாறு நடக்கட்டும் என்பது எமது வேணடுதல்.

2004 மறைந்து 2005 இல் காலடி எடுத்து வைத்துள் ளோம். ஆண்டின் முதல் நாள் திருவழிபாட்டு வாசகங்களும் வழிபாடுகளும் அன்னை மரியாளைச் சுட்டிக்காட்டி நிற்கின்றன. மரியாளின் வழியாக இறை ஆசீர் கிடைக்க வேண்டும் என்பது எமது இதயங்களிலே எழுகின்ற ஆசை - வேத புத்தகத் திலே இறை ஆசீர் பற்றிப்படிக்கின்ற போது இறைவன் ஆசி வழங்கிக்காப்பார், திருமுகத்தை ஒளிரச் செய்வார், அருள் பொழிவார், திருமுகத்தைத்திருப்புவார், அமைதி அருள்வார் என்றெல்லாம் காணப்படுகிறது.

அன்று இஸ்ரயேல் மக்கள் ஓர் இருண்ட சூழ்நிலையில் வாழ்ந்தார்கள். யுத்தம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளைநோய் என்றெல்லாம் கலங்கி ஒளி பிறந்து வழிபிறக்காதோ, இருள் மறைந்து அருள் சுரக்காதோ, அடிமை வாழ்வு மறைந்து உரிமை வாழ்வு பிறக்காதோ, நம் வாழ்வின் விடியலின் பூபாளம் இசைக்க வசந்த காலம் பிறக்காதோ என்று ஏங்கி தவித்த காலத்தில் தெய்வமகன் இயேசுக்கிறிஸ்து ஒளியாக வழியாக, ஆசீராக இவ்வுலகிற்கு வந்தார்.

மீட்பு வந்தது இயேசு வழியாக, இயேசு வந்தது தாய் மரியின் வழியாக என்று 9ம் பயஸ் திருத்தந்தை சொல்வது போல நல் ஆசீர் பெற்றுத் தர அன்னை எமக்காகக் காத்திருக்கின்றாள்.

அன்னை மரியாளின் அர்ப்பணிப்பையும் ஆன்மீக வாழ்வையும் நாம் விபரிக்க முடியாது. குழந்தையின் விரலில் வலியிருந்தால் தாயின் இதயத்தில் வலியுண்டாகும் - இது ஒரு ரஷ்ய பழமொழி. மானாக மயிலாக, மதியாக நதியாக, தேனுண்ட வண்டாக தான் பெற்றெடுத்த பிள்ளை சுண்டு விரலசைத்தால் அதைக் கண்டு ரசிப்பாள், கண்ணீர் துளி விழுந்தாள், துடிப்பாள், கண்ணீர் வடிப்பாள் - இது ஒரு தாயின் பாசத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு கவிஞனின் கவிதை வரிகள்.

மரியாள், அவள் ஓரு போதும் மரியாள். இந்த அன்னை இன்றும் என்றும் எமக்காகப் பரிந்து பேசி இறை ஆசீர் பெற்றுத் தர வல்லவர்.

பொருள் தேடும் இவ்வுலகில் இறை அருள் தேடி அலைந்தவள், இறைவனின் தூதனால் 'அருள் நிறைந்தவள்' எனப் போற்றப்பட்டவள். இயேசுவின் கால்பட்ட இடத்தை நாம் புனித பூமி என்றழைக் கின்றோம். தெய்வம் இயேசுவை 10 மாதங்கள் சுமந்து, சீராட்டிப்பாராட்டி அன்பு காட்டிப் பாசம் காட்டி வளர்த்த அந்த அன்புத்தாயை, இறைவனின் தாயை புனித தாயை இருகரம் கூப்பி இறை ஆசீர் பெற்றுத் தர அவளுக்கு முதல் மரியாதை கொடுப்போம்.

மத் 1:20ம் திருவசனம் சொல்கிறது. மரியாளை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். அன்று யோசேப்புக்கு வானதூதர் கூறிய இவ் வார்த்தைகள் எம் இதயத்தில் பதிய வேண்டும். சீராக் 3:5 சொல்கிறது "தன் தாயை மதிக்கிறவன் செல்வங்களை சேர்தவன் போலாவான்."

"தினமும் செபமாலை சொல்லி அன்னைக்கு புகழ்பாடும் பக்தன் ஒரு போதும் பிழையான வழியில் செல்லமாட்டான்" - என்று புனித லூயி மொன்போர்ட் கூறுகின்றார். கத் தோலிக்க திருச்சபை வேத சத்தியங்களினால் அன்னைக்குப் புகழ் மாலை சூட்டியது. கி.பி 431 இல் மரியாள் இறைவனின் அன்னை என்றும், கி.பி 649 இல் மரியாள் என்றும் கன்னி என்றும், 1854இல் மரியாள் அமல உற்பவத் தாய் என்றும், 1950இல் மரியாள் விண்ணகம் சென்ற தாய் என்றும் விசுவாச அறிக்கையிட்டது.

"அவர் சொல்வதுபோல செய்யுங்கள்" என்று இயேசுவைக் சுட்டிக் காட்டிய அன்னை மரியாளிடம் புதுவருடத்தில் இறையாசீர் வேண்டுவோம். எமது தேவைகள், கனவுகள், கருத்துக்கள் ஆசைகள், அபிலாசைகள் இறைவனின் திருவுளப்படி நிறைவேறவும், எமது இலங்கை நாட்டிற்கு நிலையான நீதியோடு கூடிய சமாதானம் கிடைக்க வேண்டும் என்றும்.

அநீதிகளற்ற, அக்கிரமங்களற்ற இனப் படுகொலைகளற்ற, துப்பாக்கி கலாச்சாரமற்ற, யுத்தங்களற்ற, அடிமைத் தனங்களற்ற, ஒளிமயமான எதிர்காலம் இவ்வாண்டில் உதிக்க செபிப்போம், செயல்படுவோம்.

- அருள்தந்தை கிளமென்ற் அன்னதாஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பிள்ளைகளுக்கு மட்டும்**

முடிவுத்திகதி
**15 - 02 - 2005**

# விவிலியம் கற்போம் - 36

## தலைமகன் சாவு

**(விடுதலைப் பயணம் 12: 29–36)**

**(பொருத்தமான சொற்களால் இடைவெளிகளை நிரப்புக)**

நள்ளிரவில், அரசனாக இருந்த பார்வோனின் தலைமகன் தொடங்கி சிறையில் கிடந்த கைதியின் தலைமகன் வரை ...................... நாட்டின் எல்லா ஆண் பால் தலைப்பிறப்பையும் ........... விலங்குகளின் ..................... ஆண்பால் தலையீற்றுக்களையும் ஆண்டவர் சாகடித்தார். பார்வோனும், அவனுடைய பணியாளர்களும் எகிப்தியர் அனைவரும் விழித்தெழுந்தனர். எகிப்தில் பெரும் அழுகுரல் கேட்டது. ................ சாவு இல்லாத வீடு எதுவுமே இல்லை! பார்வோன் மோசேயையும் ஆரோனையும் ............... கூப்பிட்டு அவர்களிடம், 'நீங்களும் இஸ்ரயேல் மக்களும் எழுந்து என் மக்களிடமிருந்து வெளியேறிச் செல்லுங்கள், ......................, நீங்கள் சொன்னபடியே ஆண்டவருக்கு வழிபாடு செய்யுங்கள் நீங்கள் கேட்டபடியே உங்கள் ஆட்டு மந்தையையும் .................... ஆட்டு மந்தையையும் கூட்டிக் கொண்டு செல்லுங்கள், போய் விடுங்கள், எனக்கும் ஆசி கூறுங்கள்' என்றான்.

நாட்டிலிருந்து ..................... போய்விடுமாறு எகிப்தியர் இஸ்ரயேல் மக்களை அவசரப்படுத்தினர்: 'நாங்கள் ................ சாகின்றோம்' என்றனர். மக்கள் பிசைந்த மாவு புளிக்கும் முன்னரே அதை எடுத்து, மாவு பிசையும் பாத்திரங்களில் வைத்து, தங்கள் போர்வைகளில் கட்டித் தோள்கள் மேல் எடுத்துச் சென்றனர். இஸ்ரயேல் மக்கள் மோசேயின் வார்த்தையின் படி செயல்பட்டனர். அவர்கள் எகிப்தியரிடமிருந்து வெள்ளி அணிகலன்களையும் போர்வைகளையும் ....................... வாங்கினர். ஆண்டவர் எகிப்தியரின் பார்வையில் இம்மக்களுக்குத் தயவு கிடைக்கச் செய்தமையால் அவர்களும் இவர்கள் கேட்டதைக் கொடுத்தனர்.

**விடைகள்: எகிப்து, மற்றும், அனைத்து, ஏனெனில், இரவிலேயே, போங்கள், உங்கள், விரைவில், எல்லோருமே, கேட்டு.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்–36

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகில் அதிகமாக உற்பத்தியாகும் உணவு வகை
   (கோதுமை , நெல், கரும்பு)

2. முதன் முதலில் விண்வெளியைச் சுற்றிய வீரர்
   (யூரி ககாரின், ஸ்டெபனொச், வெலன்டினா தெரேஸ்கோவா)

3. இலங்கையின் விசாலமான வாவி எது?
   (பேரை வாவி, பதவியா வாவி, மட்டக்களப்பு வாவி)

4. மாயமானாக வந்து சீதையை மயக்கியவன்
   (இராவணன், ஜடாயு, மாரீசன்)

5. அண்மையில் பேரழிவை ஏற்படுத்திய கடற்கோளினால் இலங்கையில் அதிகளவில் பாதிக்கப்பட்ட மாவட்டம்
   (காலி, முல்லைத் தீவு, அம்பாறை)

6. நில அதிர்ச்சியினால் கடலில் ஏற்படும் பேரலைகளைக் குறிக்கும் 'சுனாமி' என்ற சொல்
   (சீனமொழி, ஜப்பானிய மொழி, ரஷ்ய மொழி)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்–36**

**தொண்டன்**

**அ.பெ. எண் 44**

**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 34

அங்கே, அதில், இப்போதே, வயல்வெளியில்,
வானோக்கி, நிலத்தில், அதனிடையே, கோசேன்.

## அறிவை வளர்ப்போம் - 34

1) கும்பகோணம்
2) இதயம்
3) சனத்ஜெயசூரியா
4) சிறக்கப் போ
5) கபடு
6) பாலா

இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து நூறு ரூபா பரிசு பெறுவோர்!

- **ம.கி. றொசாந் கொரேரா**
  *மலரகம்,*
  *மூதூர் - 03*
- **தேவராஜா சசிகலா**
  *கணபதி நகர்,*
  *செங்கலடி.*

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து ஐம்பது ரூபா பெறுவோர்!

- **கிருஷாந்தினி ஈஸ்வரன்**
  *டானியல்.சதுக்கம்*
  *திமிலை தீவு*
  *மட்டக்களப்பு.*
- **T. கிரிகரன்**
  *இல. 09, கோணர் வீதி*
  *(R.D.A. குவாட்டர்ஸ்)*
  *மட்டக்களப்பு.*

பாராட்டுப் பெறுவோர்

- **J.S. குயின்டன் சாமுவேல்**
  145/15 *கம்பளை வீதி,*
  *நாவலப்பிட்டி.*
- **ந. சுதன்ராஜா**
  *புனித யூதா ததேயு திருத்தலம்,*
  *பசறை.*

போட்டியில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.


(ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# வீசி எழுந்த கடல் விட்டுச் சென்ற எச்சங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wanasinghe Printers, Batticaloa.